254

சந்திரோதயம்



ஸ்ரீமதி சாந்தகுமாரி

11-1941 உள்நாடு விலை 0—1—6

கலைமன்னன்

ஸ்ரீ P. K. ராஜா சாண்டோ

அவர்கள் டைரக்ஷனில்

லக்ஷ்மி காந்தன்

(தமிழ் சமூகப்படம்)

M. R. ராதா : : K. T. ருக்மணி

P. A. குமார் : நடிப்பது.

சந்திரா பிக்சர்ஸ்

57, பூந்தமல்லி ஹைரோட், : : வேப்பேரி, மதருஸ்.

மஹத்தான ஆரம்பம்

செப்டம்பர் 17 புதன்கிழமை

சென்னை

பாரகனில்

செப்டம்பர் 17 புதன்கிழமை

★

மதுரை முருகன் டாக்கீஸாரின்

அசோக் குமார்

எம். கே. தியாகராஜ பாகவதர்

★ V. நாகய்யா
P. கண்ணாம்பா
N. S. கிருஷ்ணன்
T. A. மதுரம் ★

மற்றும் பலர் நடித்தது.

வசனம் : இளங்கோவன் • ராஜா C. சேகர் டைரக்ஷன் : • பாட்டு : பாபநாசம் சிவன்

மதுரை	—	11-வது வாரம்
திருச்சி	—	,,
சேலம்	—	,,
கோயம்புத்தூர்	—	,,
கும்பகோணம்	—	,,
பெங்களூர்	—	10-வது வாரம்
திருநெல்வேலி	—	9-வது வாரம்
காரைக்குடி	—	9-வது வாரம்
வேலூர்	—	5-வது வாரம்
கள்ளிக்கோட்டை		,,
நாகர்கோயில்	—	4-வது வாரம்
விருதுநகர்	—	3-வது வாரம்
மைசூர்	—	2-வது வாரம்
புதுக்கோட்டை		20உ முதல்

இப்படத்தில் M. K. தியாகராஜ பாகவதர் பாடியுள்ள பாட்டுக்களை "ஓடியன்" ரிக்கார்டுகளிலும், நாகய்யா, கண்ணாம்பா பாடியுள்ள பாட்டுக்களை H. M. V. ரிக்கார்டுகளிலும் கேளுங்கள்.

உங்கள் அதிர்ஷ்டம்

ஒரு போஸ்டு கார்டில், கடிதம் எழுதும் சரியான நேரமும், உங்கள் முழு விலாசத்தையும் எழுதி அனுப்பினால் உடனே ஒரு V. P. P. ரூ. 1—9—0-க்கு அனுப்பப்படும். அதில் உங்களுக்கு எதிர்கால 12 மாதங்களுக்கு மாதவாரியாக பலாபலன்களும், வியாபாரத்தில் லாபம், நஷ்டம், உயர்வு, மாறுதல், தாழ்வு, கலியாணம், சந்தோஷம், சந்தானம், உடம்பில் ஏற்படும் பாதைகள், அவைகளிலிருந்து தப்புவிக்க மார்க்கங்கள் முதலியவைகள் அனுப்பப்படும். மேற் சொன்னவைகள் நிறைவேறாமல் போனால் பணம் வாபீஸ்.

SHRI MAHATMA ASHRAM, (CTM) Jullundur City

ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்

12,58,400 ஜனங்கள் போற்றுவது

ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரீகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. **2.**

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (c)

வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

ரூ. 1/4-க்கு 4 கடியாரங்களும், 750 நவீன பரிசுகளும்



ஆட்டோ ரோஸ் வாசனை 4 புட்டிகள் ரூ. **1/4**-க்கு ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரோல்டு கோல்டு டம்மி கை கடியாரம் 1, ரயில்வே பாக்கெட் கடியாரம் 1, சேப்டி ரேஸர் 1, ஷேவிங் சோப் 1, ஷேவிங் பிரஷ் 1, சீப்பு 1, சிகரட் கேஸ் 1, சிகரட் லைட்டர் 1, மோதிரம் 1, ஒரு ஜோடி கத்தரி, தீப்பெட்டி கேஸ் 1, பவுண்டன் பேனா 1, ஒரு பாக்கெட் பவுடர், 555 அடி தூர ஒளி வீசும் ஒரு டார்ச்சு அல்லது 5 வருஷ உத்திரவாதமுள்ள பலமான 'பி' டைம்பீஸ் முதலியவைகள் இனாம். தபால் பாக்கிங் செலவு 12 அணா தனி.

AMERICAN COMMERCIAL STORES, **P. B. No. 12213, Calcutta** *[C]*

சந்திரோதயம்

PHONE 2572

60, தம்புசெட்டி தெரு + மதராஸ்

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" —குறள்

ஆசிரியர் ஜி. ஆர். நாதன்

ஆரம். 6	சென்னை 1941ஆ செப்டம்பர்மீ 15உ	முத்து. 4

பொருளடக்கம்

			பக்கம்
வெறும் கற்பனை!	...	...	4
என்ன சங்கதி?	...	...	9
வீண் வம்பு	...	"சல்லடை"	12
சலனமும் சப்தமும்	...	"தேனீ"	14
வெளி விமர்சனம்	...	...	15
வாடகை கோபம்	...	ஏ. எம் ரஷீத்	17
நங்கையர் உலகம்	...	"ராஜீவி"	21
கௌரவப் போர்	...	"கார்த்திகை"	23
பாட்டியின் ஆசீர்வாதம்	...	வி. வி. சுப்ரமணியன்	25
சிரித்துப்பார்	...	...	27
காட்டிலே நடந்தது (பாப்பாப்பகுதி)	...	பி. எஸ் எஸ்.	29
உடைந்த படகு	...	"நாதன்"	33

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவையாரையும் குறிப்பிடுவனவல்ல.

வெறும் கற்பனை!

இலவம் பழம் என்றால் கிளிக்கு ஒரு அலாதி ஆசை. செக்கச் செவேலென்று நீண்டு உருண்டு கண்ணைப் பறிக்கும் கவர்ச்சியுடன் இருக்கும் ஒரு பழத்தைக் கண்டால் யாருக்குத்தான் ஆசையாயிருக்காது! எனவே இலவம் பழம் நன்றாகப் பழுக்கட்டும், பிறகு வயிறு நிறையத் தின்னலாம் என்று கிளிகள் ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருக்குமாம். ஆனால் ஒருநாளைக்கு அந்த இலவம் பழம் வெடித்துவிடும்! அதில் வெறும் பஞ்சும் கொட்டையுந்தான் காட்சியளிக்கும். பாவம்! கிளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று விடும்.

இதனால்தான் நம் நாட்டிலே "இலவுகாத்த கிளி" என்று ஒரு பழமொழிகூட வழங்கி வருகிறது. வாழ்க்கையில் எதிர்பாராத ஏமாற்றங்கள் நேரும்பொழுது மனிதர்கள் இந்தப் பழமொழியை எடுத்துச் சொல்லுகிறார்கள். இப்பழமொழி இப்பொழுது இந்தியாவுக்கு, மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

உலக மகா யுத்தம் ஆரம்பித்து இப்பொழுது இரண்டு வருடங்களுக்கு மேலேகூட ஆய்விட்டது. ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதற்காகவே யுத்தம் புரிவதாக பிரிட்டன் இன்னும் சொல்லி வருவதோடு இந்தியாவையும் தன் இஷ்டப்படி யுத்தத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

'ஜனநாயகத்துக்காகப் போர்புரிவதாய்ச் சொல்லிக் கொண்டு இந்தியாவையும் உதவி செய்யச் சொல்கிறீர்களே! அப்படியானால் இந்தியாவில் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதுதானே' என்று காங்கிரஸ் பிரிட்டிஷாரைக் கேட்டது. அதற்கு அவர்கள் பதில் சொல்ல முடியாமல் மென்று விழுங்கிக் கொண்டு வந்தனர்.

'இன்னும் பார்ப்போம்; உலகத்திற்கே க்ஷேமம் உண்டாகையில் நமக்கும் அதில் பங்கு கிடைக்காதா?' என்று இந்தியா பொறுமையுடன் காத்திருந்தது. ஆனால் அதன் கதி 'இலவு காத்த கிளி'யைப் போல் தான் ஆயிற்று. இந்தியா எதிர்பார்த்த விஷயம் இலவங்கனி வெடிப்பது போல் வெறும் வரண்ட பஞ் சாகக் காற்றிலே பறந்துவிட்டது.

எங்கேயோ அட்லாண்டிக் சமுத்திரத்தில் மிஸ்டர் சர்ச்சிலும், ரூஸ் வெல்ட்டும் சந்தித்து சர்ச்சை செய்தனர். உலகத்தைக் கடைத்தேற்ற வேண்டிய பரோபகார யோசனைகளைப் பரிமாறிக் கொண்டனர். உடனே துப்பறியும் நாவல் எழுதும் ஆசிரியர்களின் மூளையைப்போல், அவர்களுடைய மூளையும் 8 வித கற்பனைகள் செய்தன. அந்தக் கற்பனைகளின் மர்மம் தெரி யாமல் உலக முழுதும் திண்டாடிக் கொண்டிருந்தது.

முக்கியமாய் இந்தியா அவர்களுடைய 8 அற்புதக் கற்பனைகளின் மர்மத்தை யறிய கண்ணில் விளக்கெண்ணெயைப் போட்டுக் கொண்டு 'கொட்டு கொட்'டென்று விழித்திருந்தது. கடைசியில் சர்ச்சில்-ரூஸ்வெல்ட் டின் 8 கற்பனைகளும் **வெறும் கற்பனைகள்**தான் என்று தெரிந்துபோயிற்று.

நீரிலே எழுதினல் என்னகுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. 'நீர்மேல் எழுத்தாகும்' என்று யாக்கையைப் பற்றி உதாரணமாய்ச் சொல்லு வார்கள். நீரிலே எழுதும் எழுத்தே நிலையற்றதானல், அதன்மீது பேசும் பேச்சைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது? ஆகவே அட்லாண்டிக் சமுத் திரத்தின்மீது அவர்கள் பேசிய பேச்சும் வியர்த்தமாய்ப் போனதில் வியப் பில்லையல்லவா!

சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் பேசி முடிவு செய்த பிரகடனத்தை, பிரிட் டிஷ் உதவி பிரதம மந்திரியான ஸ்ரீ ஸி. ஆர். ஆட்லி உலகத்துக்கு அறிவித் தார். பின்பு ஒரு பிரசங்கத்தில் "இந்த தேச சர்க்காரால் விடப்பட்டிருக்கும் கூட்டுப் பிரகடனத்தில், இன்று நாங்கள் எந்த சுதந்தரத்துக்காகப் போராடு கிறேமோ, அது உலகத்திலுள்ள வேறு ஜாதியினருக்கு மறுக்கப்படும் என் பதற்கான பதங்கள் ஏதுவுமில்லை. வெள்ளையராயினும் சரி, கருப்பராயினும் சரி, உலகத்திலுள்ள சகல ஜாதியினருக்கும் இது பொருந்தும்" என்று கூறி யிருக்கிறுர்.

கடலிலே மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவனுடைய கைக்கு கிடைக்கும் துரும்பு, எப்படி அவனுக்கு ஆறுதல் அளிக்குமோ, அந்த மாதிரி இந்தியாவை ஒருவாறு சந்தோஷப்படும்படி செய்தது ஸ்ரீ ஆட்லியின் பிரசங்கம்.

ஆனல் இப்பொழுது மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கமோ ஸ்ரீ ஆட்லி யின் வார்த்தையை ஆவாகனம் செய்துவிட்டது. ஏதோ ஆதரவுக்கு ஒரு துரும்பாவது கிடைத்ததே என்று அகமகிழ்ந்த இந்தியா சர்ச்சிலின் வார்த்தை களைக் கேட்டபின், தன் கையிலிருந்தது உண்மையிலேயே ஒரு துரும்பு தானென்பதையும், அதனல் துரும்பளவு பிரயோஜனமும் இல்லையென்பதை யும் தெரிந்து கொண்டது.

சமுத்திரத்திலே கற்பனை செய்த பின் சபைபத்தில் மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் தன் கற்பனைகளுக்கு வியாக்யானம் செய்திருக்கிறார். அதாவது, "......இந்தியா, பர்மா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இதர பகுதிகள் முதலியவற்றின் அரசியலமைப்பின் வளர்ச்சி—இந்தக் கூட்டுப் பிரகடனத்தால் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. அட்லாண்டிக் சந்திப்பின்போது (ஐரோப்பாவில் இப்போது) நாஜி நுகத்தடியில் சிக்கிக் கிடக்கும் ராஜ்யங்கள், அத்தேச மக்களின் பொது வாழ்வு, அவற்றின் ஆதிபத்ய உரிமைகள், சுயாட்சி முதலியவை பற்றியும், இந்த தேசங்களின் எல்லைகள் மாற்றப்பட வேண்டியிருந்தால் எவ்வித கொள்கைகளை அனுஷ்டிப்பது என்பது போன்றவையே எங்கள் மனதில் பிரதானமாக இருந்தன........." என்பதுதான் சர்ச்சிலின் வியாக்யானம்.

சர்ச்சிலின் இந்தப் பேச்சால் இந்தியா வெகுவாக ஏமாற்றமடைந்து விட்டது. குதிரை குட்டிபோடுவதற்கு பதில் முட்டையிட்டால் எவ்வளவு திகைப்பு வருமோ அவ்வளவு திகைப்பை சர்ச்சில் அள்ளி வீசிவிட்டார்.

"அருமை சகோதரர்களே! கள் குடிப்பது மகாபாவம்! அதனால் பல தீமைகள் உண்டாகின்றன. தயவு செய்து இனிமேல் கள் குடிக்க வேண்டாம்......" என்று தக்க உதாரணங்களுடன் ஒரு சீர்திருத்த வாதி மூன்றே முக்கால் மணி நேரம் பெருமூச்சு வாங்கப் பிரசங்கம் செய்தார்.

அன்றுமாலை மேற்படி சீர்திருத்தக்காரர் கள்ளுக்கடையில் காட்சியளித்தார். இதை சில வழிப்போக்கர் கண்டு "என்னஐயா அனியாயம்! சற்று நேரத்துக்கு முன்னே கள் குடிக்க வேண்டாமென்று எங்களுக்கு உபதேசம் செய்தாயே; இப்பொழுது நீயே குடிக்கிறாயே! இது நியாயமா?" என்று கேட்டனர்.

"சரியாய்ப்போச்சு, நான் உலக நன்மைக்காகச் சொன்னேனே ஒழிய, எனக்காகச் சொல்லவில்லையே! மேலும் நான் குடிக்காவிட்டால் உங்களிடம் வந்து அப்படியெல்லாம் பேச முடியுமா, சொல்லுங்கள்" என்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார் சீர்திருத்தக்காரர்.

அதுமாதிரி இருப்பதாகத்தான் தெரிகிறது ஸ்ரீ சர்ச்சிலின் பிரசங்கம். உலகத்திலுள்ள சகல தேச மக்களுக்கும் 8 கற்பனைகள் பொருந்தும், என்றார் ஆட்லி. ஆனால் நாஜிகளிடம் அடிமைப்பட்ட நாடுகளுக்குத் தான் 8 பாயின்ட் பொருந்தும் என்று சர்ச்சில் தெளிவுபடுத்திவிட்டார். அதாவது பிரிட்டனுக்குக் கீழ் இருக்கும் அடிமை நாடுகளுக்கு தன் 8 கற்பனைகள் சம்பந்தமில்லை யென்பது தெளிவாகிறது.

அப்படியானால் இந்தியாவின் கதிதான் என்ன? அதற்கு எப்பொழுது விடுதலை? அரசியல் மேதாவிகள் செய்யும் 8 கற்பனைகளும் 16 கற்பனைகளும் இந்தியாவுக்கு சம்பந்தமில்லை யென்றால் எங்கேயோ எதற்காகவோ நடக்கும் யுத்தத்திற்கும், இந்தியாவுக்கும் எப்படி சம்பந்தமுண்டாகும்? யுத்தத்திற்கு இந்தியா உதவவேண்டும்; ஆனால் அதே யுத்தப்போக்கினால் இந்தியாவில் எவ்வித நல்ல மாறுதலும் உண்டாகாது. இதை எப்படி ஒப்புக்கொள்வதென்றே தெரியவில்லை.

அடிமை யென்றால் எல்லாம் ஒன்றுதான். நாஜிகளின் கீழ் இருக்கும் அடிமை நாடுகளுக்கு எத்தகைய தீங்குகள் உண்டாகுமோ, அப்படித்தான் மற்ற அடிமை நாடுகளுக்கும் உண்டாகின்றன. அப்படியானால் நாஜிகளின் கீழிருக்கும் அடிமை நாடுகளை விடுவிக்க முயலும் பிரிட்டன் தன் காலடியிலேயே அடிமையாய்க் கிடக்கும் இந்தியாவுக்கு ஏன் முதலில் நிவாரணம் அளிக்கக் கூடாது?

ஒரு சன்யாசிக்கு சரியாகவே கௌபீனம் தரிக்கத் தெரியாதாம். அப்படியிருக்க அந்தமஹான் ஊர் ஜனங்களைப் பார்த்து 'ஜனங்களே! நீங்கள் கௌபீனம் கட்டிக்கொள்வது சரியில்லை......' என உபதேசம் செய்தாராம்.

பிரிட்டனும் தன் கீழே பெரிய ஒரு அடிமை நாட்டை வைத்துக்கொண்டு பிறநாடுகளின் கீழ் இருக்கும் அடிமை நாடுகளை விடுவிக்கப் போவதாக உலகுக்கு உபதேசம் செய்கிறது.

யுத்தம் இவ்வளவு நெருக்கடியான நிலைமைக்கு வந்தும் கூட பிரிட்டன் இந்தியாவைப் பற்றி அலட்சியமாக இருந்தால், அதன் கொள்கையைப்பற்றி நாம் எவ்வித சந்தேகமும் கொள்வதற்கில்லை. மட்டைக்கு இரண்டு கீற்று என்பது நமக்குத் தெரிந்ததுதானே!

'தன்னைப் பெற்ற அன்னை அன்னிப் பிச்சை யெடுக்கிறாள், பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்' என்று நம் நாட்டில் ஒரு மொழியுண்டு. அதேபோல் பிரிட்டனுக்கு சர்வபோஷாக்கையும் கொடுக்கும் இந்தியா இன்று அடிமையாயிருந்து சோற்றுக்குத் தாளம் போடுகிறது. ஆனால் சர்ச்சிலோ அதைக் கவனியாமல் ஐரோப்பிய அடிமை நாடுகளைக்காக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்.

மொத்தத்தில் இந்தியா இன்று ஏமாற்றமடைந்து விட்டது. ஆனால் அதற்கு சர்ச்சில்தான் காரணம் என்று நாம் நினைக்கக்கூடாது. சர்ச்சில் என்றைக்கும் இந்தியாவைப்பற்றி ஒரே அபிப்ராயம்தான் கொண்டிருக்கிறார்.

இந்தியாவை என்றைக்கும் பிரிட்டனின் ஆதிக்கத்துக்குள் வைத்து **பாதுகாக்க** வேண்டு மென்பதுதான் அவருடைய அந்த எண்ணம்; இப்பொழுதும் அவர் அந்த **நல்ல** எண்ணத்துடன்தான் இருந்து வருகிறார். சுயமான வெள்ளை ரத்தம் அவருடைய உடம்பில் பாய்ந்தோடுகையில் அவர் மனச்சாட்சிக்கு விரோதமாக எப்படிப் பேச முடியும்? மேலும் அவர் விளக்கெண்ணெய்க்காரர் அல்ல; வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசும் தீரர்.

அவர் மார்க்கண்டேயரைப்போல் சிரஞ்சீவித் தன்மையைப் பெற்று விட்டாலும் கூட, அவர் இந்தியா விஷயத்தில் தன் வாழ்நாள் முழுதும் ஒரே எண்ணத்துடன் தான் இருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

நிலைமை இப்படி தகிடுதாளம் போட்டுக்கொண்டிருக்க, இந்தியாவில் சில மேதாவிகள் சட்டசபையைக் கைப்பற்ற வேண்டுமென்றும், மந்திரி பதவிகளை வகிக்க வேண்டும் என்றும், அப்பொழுது பிரிட்டன் கதறிக்கொண்டு சுயராஜ்யத்தை நம் கையில் திணித்துவிடும் என்றும் கற்பனை செய்கின்றனர்.

இவர்களுடைய கற்பனைகளால் இந்தியாவிலும், காங்கிரஸிலும் பிளவுகள் தான் உண்டாகுமே யொழிய பிரிட்டனின் (கல்) மனதில் ஒரு நூலளவான பிளவைக் கூட உண்டாக்காது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

எனவே இனிமேல் இந்தியர்களாகப் பிறந்த நாம் ரூஸ்வெல்ட்—சர்ச்சில் செய்த **வெறும் கற்பனை**களைப் போல் செய்துகொண்டு, மண்டையுடைத்துக் கொள்ளாமல் ஐக்கியப்பட்டு ஒரு மனதுடன் மகாத்மாஜியின் எத்தகைய கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ள சித்தமாயிருக்க வேண்டும். அதுவே விடுதலைக்கு வழி! நாம் முயலும்வரை முயலுவோம். அப்புறந்தான் நமக்குக் கடவுள் ஒருவர் இருந்தே இருக்கிறாரல்லவா! அவர் தலைமீது நமது பாரத்தைப் போட்டு விட்டால் போகிறது!

இனாம்!

மாதம் 675 ரூபாய் சம்பாதியுங்கள்.

நீங்கள் மாதம் ரூ. 675 வரை சம்பாதிக்க வேண்டுமானால் எமது உண்மையான அமெரிக்கன் புதிய தங்கத்திற்கு ஏஜன்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இந்த தங்கம் உறைக் கல்லின் மீது உறைத்தால் அசல் தங்கம் மாதிரியே காணப்படுகிறது. இதைக் கொண்டு பிளேட்டுகளும் அடிக்கலாம். கம்பிகளாகவும் நீட்டலாம். அதன் நிறம் மாறுபடாது. இந்தத் தங்கத்தைக் கொண்டு செய்த எல்லாவித ஆபரணங்களும் எம்மிடம் கிடைக்கும். 4 தோலா புதிய அமெரிக்கன் தங்கம், ஒரு ஜதைஅழகிய வளையல்கள், ஒரு ஜதை கடுக்கன்கள், ஒரு பம்பாய் பாஷன் மோதிரமும் கொண்ட சாம்பிள்பெட்டி அனுப்பப்படும். சுருசுருப்பான நன்கு உழைக்கும், நேர்மையுள்ள ஏஜண்டுகள் எல்லாவித சௌகரியங்களையும் பெறுவார்கள். ஏஜன்ஸி விவரங்களுக்கு எழுதவும்.

இனாம் :—முழு விவரங்களடங்கிய நகை காட்லாக்கும், ஏஜன்ஸி பாரமும் இனாமாக அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

AMERICAN NEW GOLD COMPANY

Post Box No. 61 (CTM) LAHORE (INDIA)



இரட்டைத் தாழ்ப்பாள்

'பத்து நாட்களுக்குள் பாதுகாப்பு கௌன்ஸிலின் பாது காப்பிலிருந்து விடுதலை யாகவேண்டும்; இல்லையேல் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பேன். கபர்தார்!' என்று ஸ்ரீ ஜின்னா தகிடுதத்தம் செய்தார்.

அவருடைய உருட்டலுக்கு சிலர் பணிந்து பாதுகாப்பு கௌன்ஸிலிலிருந்து விலகிக் கொண்டனர். ஆனால் வேறு சிலர் ஜின்னாவின் மிரட்டல் வார்த்தைகளை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டு விட்டனர்.

வங்கப்புலியான பஸ்லுல் ஹக் தன் அபிப்ராயத்தை வெளியிட 10 நாள் வாய்தா வேண்டுமென்றார். தந்தேன் என்றார் ஜின்னா. 10 நாட்களும் நன்றாக யோசித்தார் ஹக்.

உடனே "ஐயா, ஜின்னாவே! நீர் பாதுகாப்பு கௌன்ஸிலை விட்டுத் தானே என்னை வெளியே வரச் சொன்னீர்! இந்தாரும், முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி கௌன்ஸிலிலிருந்தும் கூட வெளியே வந்து விட்டேன். இப்பொழுது திருப்தி தானே ஐயா? இனி உம் சர்வாதிகாரத்தை நடத்தும் பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டு, பாதுகாப்பு கௌன்ஸிலிலும், லீக்காரியக் கமிட்டியிலும் தனக் கிருந்த பந்தத்தை அறுத்துக் கொண்டார். எனவே பஸ்லுல் ஹக் 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று ஜின்னாவுக்கு நல்ல பாடத்தைக் கற்பித்து விட்டார்.

தமிழ்த் தினம்

இம்மாதம் 11-ந் தேதி ஒரு புனிதமான தினம். அதாவது பாரதி தினம். பாரதியார் ஒரு தமிழர், அதிலும் அவர் ஒரு தமிழ்க் கவிஞர்; கவிஞரிலும் மகா கவிஞர்.

அவர் தமிழுக்காகப் பிறந்தார். தமிழுக்காக வளர்ந்தார். தமிழுக்காக கவிமழை பொழிந்தார். தமிழர்களைத் தட்டி எழுப்பினார். குற்றுயிராய்க் கிடந்த தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தார். தன் சாகா வரம் பெற்ற கவிகளால் தமிழுடம்பை புஷ்டியுடன் வளர்த்தார். தமிழ் மொழியே, தான்-தானே தமிழ்மொழி என்ற மாதிரியில் அவர் வாழ்ந்தார்.

அப்படிப்பட்ட பாரதியார் தினத்தைக் கொண்டாடுவது தமிழர்களின் இன்றியமையாத கடன் இந்த செப்டம்பர் 11-ந் தேதி தமிழ் நாடெங்கும் தமிழ் தினம் கொண்டாடப் பட்டது. தமிழே உருவான பாரதியார் தினத்தைத் தமிழ்தினம் என்று ஏன் சொல்லக் கூடாது?

கலாட்டா கூட்டம்

புனா பாஸிஸ்ட் எதிர்ப்பு மகாநாட்டின் டெலிகேட்டுகளின் கூட்டம் ஒன்று கோகலே ஹாலில் நடைபெற்றது. தலைவராய் இருக்க வேண்டியவர் வாராமல் போகவே, வேறொருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

சுமார் 200 மாணவர்கள் உள்ளே செல்வதற்கு டிக்கெட் கேட்டனர். ஆனால் இடம் இல்லாததால் பொதுக் காரியதரிசி டிக்கெட் கொடுக்க மறுத்து விட்டார். அத்துடன் அவர் டிக்கெட் இல்லாதிருந்தவர்களையும் ஹாலிலிருந்து போலீஸார் உதவி கொண்டு வெளியேற்றினர்.

உடனே எல்லோரும் தெருவில் கூடி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்து விட்டனர். உள்ளே யிருந்த மாணவர்களோ, பாஸிஸ்ட் எதிர்ப்பு அறிக்கையில் கையெழுத்திடுவோருக்கு டிக்கெட் கொடுக்கவேண்டும் என்று கோரினர்.

தலைவரும், காரியதரிசியும் ஏதோ பேச முன்வந்தனர். ஆனால் மாணவர்கள் அவர்களைப் பேச விடாமல் தடுத்து தங்களுக்கென ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்தனர்.

அதன்பின் ஹாலில் இரண்டு தலைவர்களால் இரண்டு கூட்டங்கள் நடந்தன. இரு தலைவர்களும் இரண்டிரண்டு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

இரு கட்சிகளும் தங்களுக்குத்தான் மெஜாரிட்டி இருக்கிற தென்றும், தங்கள் நடவடிக்கைகள் தான் சட்டபூர்வமானவை என்றும் கூறிக் கொண்டு கூட்டத்தைக் கலைத்தனர்.

பாஸிஸ்ட்டை எதிர்க்கும் இந்த மேதாவிகள் எவ்வளவு ஐக்கியத்துடன் கூட்டத்தை நடத்தினார்கள் என்பதைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது.

தங்களுக்குள்ளேயே ஒற்றுமையின்றித் தான்தோன்றியாய்த் திரியும் இவர்கள் பாஸிஸ்ட்டை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்வது விந்தைதான்.

இனாம்!

மாதம் ஒன்றுக்கு ரூ. 775 சம்பாதியுங்கள்.

நீங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 775 சம்பாதிக்க வேண்டுமானால் எமது ஸ்பெஷல் புதிய தங்கத்திற்கு ஏஜன்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இதை உறைக் கல்லின் மீது உறைத்தால் நிஜத் தங்கம் போலவே காணப்படுகிறது. இது அசல் தங்கம் மாதிரியாகவே இருப்பதால் தட்டுகளாகவும் அடிக்கலாம்; கம்பியாகவும் இழுக்கலாம். இதன் நிறம் மாறவே மாறாது. எமது தங்கத்தால் செய்த எல்லாவித ஆபரணங்களும் எம்மிடம் கிடைக்கும். 7-தோலா ஸ்பெஷல் புதிய தங்கம், 2 ஜதை அழகிய வளையல்கள், 2 ஜதை கடுக்கன்கள், 2 ஜதை மோதிரம் பம்பாய், பங்கால் பாஷனுடையதாகவும் இவைகள் கொண்ட சாம்பிள் பெட்டி ரூ. 5/- தான். சுருசுருப்பான நன்கு உழைக்கும் நேர்மையுள்ள ஏஜன்ட்கள் எல்லாவித சௌகரியங்களையும் பெறுவார்கள். ஏஜன்ஸி விவரங்களுக்கு எழுதுங்கள்.

இனாம் :—முழு விபரங்களடங்கிய காட்லாக்கும், ஏஜன்ஸி விண்ணப்ப பாரமும் முற்றிலும் இனாமாக அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

NEW GOLD SUPPLY Co., (C.T.M.)

JULLUNDUR CITY

காந்திஜி பதில்

தமிழ் நாட்டிலிருந்து 47 சத்யாக்ரஹிகள் சத்யாக்ரஹம் செய்வதிலிருந்து தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் விலக அனுமதி கோரியிருந்ததை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காந்திஜிக்கு அனுப்பி அவருடைய உத்தரவைக் கோரி யிருந்ததற்கு, காந்திஜி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியே கீழ்க் கண்டுள்ள முறைப்படி அனுமதி கொடுக்கலாம் என எழுதியிருக்கிறார்:

1. எந்தக் காரணத்தை யொட்டியும் சத்யாக்ரஹம் செய்ய இயலவில்லை யென்று எவர் அறிவித்தாலும் அவர் பெயரை சத்யாக்ரஹ ஜாபிதாவிலிருந்து நீக்கிவிடலாம்.

2. 'விலக்களிக்கப் பட்டிருக்கிறது' என்ற வார்த்தை தாங்களே சத்யாக்ரஹம் செய்ய சம்மதித்திருந்தாலும் மேலதிகாரிகளால் முக்கிய காரணங்களுக்காக சத்யாக்ரஹம் செய்ய வேண்டாமென்று கோரப்பட்டிருப்பவர்களையே குறிக்கும். அவர்கள் பெயர்களை சத்யாக்ரஹிகள் ஜாப்தாவிலிருந்து நீக்கிவிடக் கூடாது. ஏனெனில் அவசியமானால் அவர்கள் சத்யாக்ரஹம் செய்யத் தயாராக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

3. உடல் நிலை காரணமாக மீண்டும் சத்யாக்ரஹம் செய்ய அவகாசம் கோரும் சத்யாக்ரஹிகள் எல்லோருக்கும் அவகாசம் அளிக்கவேண்டும். ஆனால் கோரப்பட்டிருக்கும் அவகாசம் 2 மாதங்களுக்கு மேலிருக்குமானால் காந்திஜியின் யோசனையை அவர்கள் கோரவேண்டும்.

4. உடல் நிலை தவிர வேறு காரணங்களுக்காக நீண்ட கால அவகாசம் கோருபவர்கள் தாங்களாக தற்காலிகமாக விலகிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். அவர்கள் தயாராக இருக்கும் பொழுது மீண்டும் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

சந்திரோதயம்

வருஷ சந்தா

இலங்கை முதலிய
உள்நாடு ரூ. 2-0-0
வெளிநாடு ரூ. 4-0-0

ஆறுமாத சந்தா கிடையாது.

சந்தாத் தொகையை உள் நாட்டிலுள்ளோர், மணியார்டர் அல்லது போஸ்டலார்டர் மூலமும், வெளி நாட்டிலுள்ளோர் பிரிட்டிஷ் போஸ்டலார்டர் மூலமும் முன்பணமாக அனுப்பவேண்டும். இலங்கையிலுள்ளோர் இலங்கை போஸ்டலார்டர் வரங்கியனுப்பலாம். வி. பி. மூலம் அனுப்பப்பட மாட்டாது.

சந்தா மானேஜர்
சந்திரோதயம்
60, தம்புசெட்டி தெரு, சென்னை.

டோங்ரேயின்
பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு பிரசித்தி பெற்ற டானிக்

வீண் வம்பு

"சல்லடை"

"......தீவிர காங்கிரஸ்காரர்களைப் போலவே நாமும் இந்தியர்கள்தான்......காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷ் சம் பந்தத்தை அறுத்துக் கொள்ளும் உரிமையை வற்புறுத்துகின்றனர். ஆனல் நாம் அது பெரிய துரோகம் என்று கருதுகிறோம்"

—சர்ஹென்றி கிட்னி.

'நானும் ஹரிச்சந்திரன்தான். ஆனல் ஹரிச்சந்திரன் நிஜமே பேசுவான். நான் பொய்யே பேசுவேன்' என்று ஒருவன் உளறுவதைப் போலில்லையா, மேற்படியார் பேச்சு?

* * *

......வைத்திய நிவாரணம் ரொம்ப விரிவடைந்திருக்கிறது......ஆஸ்பத்திரிக்கு வருவோர் தொகை அதிகரித்திருப்பதிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம்.

—ஆஸ்பத்திரி அறிக்கை.

'அப்படியானல் ஆஸ்பத்திரிகளின் நோக்கம் நொயாளிகளின் தொகையை அதிகரிக்கச் செய்வது தானே?' என ஒரு உள்ளூர் நோயாளி சந்தேகப்படுகிறார்.

* * *

'உண்மையான இன்பத்தை அனுபவிக்க...பில்ஸ்களை உபயோகியுங்கள்'

—மருந்து விளம்பரம்.

'உலகிலே உண்மையான இன்பம் கடவுளடியைப் பெறுவதுதான்' என்று மகான்கள் சொல்கிறார்கள். அப்படியானல் அந்த இன்பத்தைப் பெற இந்த பில்ஸ்களை உபயோகிக்கலாமா, என்று ஒரு பக்தர் கேட்கிறார்.

'...டாக்டர்களும் மாணவர்களும் யுத்தமுயற்சிக்கு உதவி செய்ய வேண்டும்' —ஸ்ரீ ஆஸ்டின் பிரசங்கம்.

'ஆனல் சரி; நானும் யுத்த முயற்சிக்கு உதவி செய்ய வருகிறேன்' என்று ஆயிரம் பேரைக் கொன்ற எங்களூர் அரை வைத்தியர் கூறிக் கொண்டு தன் வைகுண்ட மாத்திரையுடன் யுத்தகளத்திற்குச் சென்று விட்டதாகக் கேள்வி.

* * *

மாந்தலே காட்டில் யானை, காடி, மலைப்பாம்பு முதலியவைகளுடன் தயாரிக்கப்பெற்றது.

—சினிமா படவிளம்பரம்.

எனவே அந்தப் படத்தில் மனித வாசனையே இருக்காது போலும், என்று சென்னை சினிமா ரஸிகர் எண்ணுகிறார்.

* * *

"இன்று இந்தியா உண்மையிலேயே விழித்திருக்கிறது. இப்பொழுது அந்நாடு தனது கடமையையும், சாம்ராஜ்யத்துக்கு தான் செய்ய வேண்டிய கடமையையும் நன்கு உணருகிறது."

—பர்மிங்ஹாம் போஸ்ட்.

காங்கிரஸ் சத்யாக்ரஹத்தை வெற்றிகரமாக நடத்திவருவதிலிருந்தே இது தெரியவில்லையா?

* * *

'...யுத்தத்தைப் பொறுத்தவரை, இந்தியா ஒன்று பட்டும், உறுதியாக இருப்பதாகவும் சொல்லிக் கொள்ளலாம்.'

—மேற்படி பத்திரிகை.

வெறுமனே சொல்லிக்கொள்வதில் யாரும் தடைசெய்ய மாட்டார்களல்லவா!

*　　*　　*

'விமான உற்பத்தி வேகம் அதிகரிக்கிறது.' —செய்தித்தலைப்பு.

விமானங்களின் வேகம் அதிகமில்லாவிட்டாலும், விமானங்கள் செய்வதிலாவது வேகம் இருக்க வேண்டாமா?

*　　*　　*

'சர் சிக்கந்தருக்கு இன்னும் ஆசை'
—பத்திரிகைத்தலைப்பு.

ஆசைக்கோரளவில்லை யென்பது இதிலிருந்து தெரிகிறது.

*　　*　　*

.........கண்ணாடிகள் சரஸமாய்க் கொடுக்கப்படும். —விளம்பரம்.

'எங்கேயோ போகிற வியாபாரி கூட சரஸமாய்க் கொடுக்கிறேன் என்கிறாரே, அப்படியிருக்க என் மனைவி மட்டும் என் சரஸமாய்ப் பேசமாட்டேன் என்கிறாள்?' என்று ஒரு குடும்பி பிரலாபிக்கிறார்.

*　　*　　*

நீங்கள் மாதம் ரூ. 550 சம்பாதியுங்கள். —விளம்பரம்.

ஏன் ஐயா, அதற்குமேல் சம்பாதித்தால் வரி போட்டு விடுவீர்களா, என்ன!

*　　*　　*

சர்க்காரின் பிளான்கள் எல்லாம் மலடாயின. —செய்தித்தலைப்பு.

அவைகளின் மலடு நீங்க ராமேஸ்வரம் போய்வரட்டுமென்று அந்தப் பிளான்களுக்கு எஸ். ஐ. ரயில்வே கம்பெனி சிபார்சு செய்யுமா?

ரூஸ்வெல்ட் திங்கள் இரவு பேசுவார். —செய்தித்தலைப்பு.

மற்ற நாட்களில் அவர் மௌன விரதத்தை அனுஷ்டிக்கிறாரா?

*　　*　　*

......வாலிப சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா...குதூகலமாய் நடந்தது. —செய்தி

முதலாவது ஆண்டு முடிந்தவுடனேயே சங்கம் வாலிபதசையடைந்து விட்டது ஆச்சரியமே!

*　　*　　*

ஐ. மா. காவல் கைதிகள்...எல்லா பத்திரிகைகளையும் படிக்கலாமென்றும் வெட்ட வெளியில் தூங்கலாமென்றும் ஐ. மா. சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.
—செய்தி.

ஒரு வேளை, அந்த சர்க்கார், பத்திரிகை படிப்பதையும், வெட்டவெளியில் படுப்பதையும் தண்டனைகளாகக் கருதியிருக்கலாம்.

*　　*　　*

பொன்மேனியில் அரிவாள் வெட்டு.
—செய்தித்தலைப்பு.

இந்தப் பஞ்சகாலத்தில் பொன்மேனியில் வெட்டு விழுவது ஆச்சரியமில்லையே!

*　　*　　*

...லாரியில் சென்று கொண்டிருக்கையில்.........ஒருவன் மரக்கிளையில் மோதி காயமடைந்தான்.
—செய்தி.

லாரியில் சென்றவன் மரக்கிளையில் மோதியது அவன் குற்றந்தானே!

*　　*　　*

ரஷியாவுக்கு பிரிட்டனின் பண உதவி—எல்லையின்றி கடன் தர உறுதி. —செய்தித்தலைப்பு.

'ஆமாம் கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதில் கஷ்டமென்ன இருக்கிறது?' என்று இந்தியா கேட்கிறது.

சலனமும் சப்தமும் :—

பிரஹலாதா

"தேனி"

மூன்பு தமிழிலே ஒரு பிரஹலாதன் வந்தான். அவன் சில அம்ஸங்களில் மோசமாகவும், சில அம்சங்களில் சிறப்பாகவும் இருந்தான். அவனுக்கு பரத நாட்டியம் என்றால் ஆழாக்கு என்ன விலை, என்று கேட்கக்கூடத் தெரிந்திருந்ததோ இல்லையோ நமக்குத் தெரியாது.

ஆனால் இப்பொழுது வந்த **மலையாள பிரஹலாதா,** தமிழ் பிரஹலாதனைக் காட்டிலும் எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கிறான். முன்னவன் வெறும் நாராயணனைத் துதிக்கத்தான் கற்றிருந்தான். இவனோ என்றால் விஷ்ணு பக்தியுடன் பரத நாட்டியத்தையும் நன்கு கற்றிருக்கிறான். அவனிடம் பரத நாட்டியம் சிக்கிக் கொண்டு படாத பாடு பட்டு விட்டது.

இந்தப் பிரஹலாதனுக்கு பரத நாட்டியம் இவ்வளவு ஜோராக வருவதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஏனெனில் அவனுடைய பெற்றோரான ஹிரண்யன்—கயாது இருவரும் பரத நாட்டியக்காரர்கள். அப்புறம் சொல்லவா வேண்டும்! குல வித்தை கல்லாமல் பாதியல்லவா!

இந்தப்படம் மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்பொரேஷனால் எடுக்கப்பட்டது. ஜெமினி ஸ்டுடியோவில் பிடிக்கப்பட்டது. டைரெக்டர் ஸ்ரீமான் K. சுப்ரமணியம்.

ஸ்ரீ சுப்ரமணியம் குழந்தைகளுக்கு நடிப்பு சொல்லிக் கொடுப்பதில் கை தேர்ந்த நிபுணர். இப் படத்திலும் அவர் ஒரு குழந்தை நடிகையை அற்புதமாக நடிக்கச் செய்ய முயன்றிருக்கிறார். ஆனால் அவருடைய டைரெக்ஷன் திறமை பழையபடியே இருக்கிறது. அதில் முன்னேற்றம் கிடையாது.

அவர் வெகு திறமையாக கதையமைப்பதாக எண்ணிக்கொண்டு, கதையைக் கையாண்டிருக்கும் முறையானது, கதையில் உப்பு சப்பில்லாமலும், விறு விறுப்பில்லாமலும், சம்பவங்கள் நிறைய இல்லாமலும் செய்திருக்கிறது.

நடிப்பைப் பற்றி பெருமைப்பட ஒன்றும் கிடையாது. ஏனென்றால் நடிகர்களில் முக்கியமானோர் நடிப்பை விட்டுவிட்டு நடனத்தில் நாட்டம் கொண்டிருந்தனர். பாடல்கள் கூடு மானவரை இனிமையாகவே யிருந்தன. ஏனெனில் பாடல்கள் பாடப் படும்பொழுது நான் திரையைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டிருந்தேன்.

படப் பிடிப்பு, ஒலிப்பதிவு முதலியவைகள், பிரமாதமான வசதிகளமைந்த—திறமைவாய்ந்த டெக்னிஷியன்கள் நிறைந்த ஒரு ஸ்டுடியோவில், படம் எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை ஞாபகப் படுத்தா விட்டாலும் ஜெமினி ஸ்டுடியோவுக்கு கெட்ட பெயர் உண்டாக்கா வண்ணம் இருக்கின்றன.

பொதுவாக படம் வெற்றி கொண்ட படம் என்று கூறலாம். அதாவது நல்ல வசூலைக் கொடுக்கும் என்று அர்த்தம். ஏனெனில் மலையாள பாஷையில் இது மூன்றாவது படம். எனவே பண வசூலுக்கு சந்தேகமே வேண்டியதில்லை.

வெளி விமர்சனம்:

பிரேம் பந்தன்

பெயரைப் பார்க்கும்பொழுது இது ஒரு ஹிந்திப்பட மென்று தப்பாக நினைத்துக்கொண்டு விடாதீர்கள். இது ஒரு அசல் தமிழ் படமே.

பேமஸ் பிலிம்ஸாரின் தயாரிப்பினால் குட்வின் பிக்சர்ஸார் வெளியிடுகிறார்கள். இதை டைரக்ட் செய்தவர் ஸ்ரீ பகவானே!

பெயரை யொத்தே கதையும் இருக்கிறது. கதையைத் தெரிந்துகொள்ளாமல் படம் பார்க்கச் செல்வது வீண் பிரயோசனமே.

ஹாஸ்யநடிகர் M. V. ராஜு வெகு அருமையாக நடித்திருக்கிறார். இவருடைய பெயர் இப்படத்தின் மூலம் உயர்ந்து விட்டது என்றே கூறலாம்.

M. K ராதாவின் நடிப்பு சுமார் தான். முன்னால் இருந்த பெயரை இழக்காதிருந்தது தான் இவரின் நடிப்பு எனலாம். பாடும் பாட்டுகள் இனிமையாக இல்லை.

இதே போல், T. சூர்யகுமாரியின் நடிப்பும் நன்றாக இல்லை. மேக்-அப் மோசம். மெல்லிய தொண்டையால் 5 பாட்டுகள் பாடுகிறார். காதல் கட்டத்தில் நடிப்பு நன்றாக இல்லை. இவர் பேச்சால் இவர் ஓர் ஆந்திரர் என்று தெரிந்துவிடுகிறது.

எல்லாப் படங்களைப் போல் இந்தப்படத்திலும் ஹிந்துஸ்தானி சங்கீதம் நிரம்பி இருக்கிறது. ஆனால் R. B. லக்ஷ்மிதேவி மாத்திரம் கர்நாடக சங்கீதத்தில் பாடுகிறார். நடிப்பு சில இடங்களில், அதாவது கார் ஓட்டும்பொழுதும், டெலிபோன் பேசும்பொழுதும், பட்லர் இங்கிலீஷ் பேசும்பொழுதும் இயற்கையாக நடித்திருக்கிறார்.

கதை, ஒளிப்பதிவு, ஒலிப் பதிவு மிகவும் மோசம். பெயர் மாத்திரம் புதிய மோஸ்தராக இருப்பினும் உள் விஷயங்கள் ஆதிகால மோஸ்தர் தான். கதையில் விறு விறுப்பு இல்லை. கோர்வையுமில்லை. சீன் சோடனைகளும், பின்னணி சங்கீதமும் சுமாராக இருக்கிறது. மொத்தத்தில் இப் படம் அவ்வளவு ரசிக்கக் கூடியதாக இல்லை.

ஆனால் நான் தங்களைப் போய்ப் பார்க்கவேண்டாமென்று சொல்லவில்லை. "கையில் காசு இருந்தால் கரியாக்காதே, பட்டாசு வாங்கி சுடுடா" என்பதைப் போல தங்கள் பை கனமாக இருந்தால், ஒழிவு நேரத்தில் போய்ப் பாருங்கள்.

டி. எஸ். குப்புஸ்வாமி,

திருக்கழுக்குன்றம்.

குறிப்பு:—நேயர்கள் எழுதும் விமர்சனங்களில் காணப்படும் அபிப்ராயங்களுக்கு ஆசிரியர் எவ்விதத்தும் பொறுப்பாளியாகமாட்டார். ஆ-ர்.



“ சங்கமாலா ”வில் ஒரு காட்சி.
கதாநாயகன் ஹம்சகுமாரன் கதாநாயகி சங்கமாலாவுடன்
காட்டில் யானைமேல் சுயேச்சையாக
திரிந்து வருகிறார் போலும்!

சந்தா அறிவிப்பு

இம்மாதம் (1—9—'41) முதல் சந்திரோதயத்தின் சந்தா எண்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. அதாவது சந்தாதாரர்களின் பழைய நம்பர்களை மாற்றி புதிய நம்பர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இனிமேல் நமக்குக் கடிதங்கள் எழுதும் சந்தா நேயர்கள் தங்கள் புதிய சந்தா நம்பர்களை அவசியம் குறிப்பிடவேண்டும். சந்தா எண்கள் குறிக்கப்படாமல் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

— சந்தா மானேஜர்.

வாடகை கோபம்

ஏ. எம். ரஷீத்

"டிக்கெட் ப்ளீஸ்!........."

நீலாம்பரம் அப்பொழுதுதான் உணர்வு பெற்றவளைப் போலத் திரும்பினாள். ஆனால் அவள் பார்வையில் அசிரத்தை சிந்தி தொத்திக் கொண்டிருந்தது.

"மைலாப்பூர்........."

"ஒன் அணு—விக்ஸ் பைஸ்......"

மெல்லிய கரங்கள் நாஸுக்காகப் பைக்குள் சென்று துளாவின. ஒரு பத்து ரூபாய் நோட்டைத் தவிர ஒரு செல்லாத நாலணு கிடந்தது.

பத்து ரூபாய் நோட்டைக் கண்டக்டரிடம் இலேசாகப் பறக்க விட்டாள்.

கண்டக்டர் ஓடி அந்த கனமான காகிதத்தை (அந்தச் சிறு தாளில் பத்து ரூபாய்கள் ஒளிந்து கொண்டிருப்பதால்தான் கனமென்று குறிப்பிடுகின்றேன்) பிடித்துக் கொண்டான். மேலுங்கீழும் ஒருமுறை அந்த நோட்டைப் பார்த்தான்.

"சில்லரை இல்லையா?......"

"இல்லே......"

"ஸாரி......என்னிடமும் சேன்ஜில்லே........."

"அப்படி என்றால்?......"

"அடுத்த ஸ்டாப்பிங்கில் இறங்கி விட வேண்டும்!"

அட தூர்ழட்! எந்த முட்டாளாவது இப்படிச் சொல்லுவானு? ஒரு யுவதியை, வேது நாஸுக்காக லேட்டஸ்ட் பாட்டர்னில் உடை தரித்திருக்கும் ஒரு நீலாம்பரத்தை—தயவு தாட்சண்யமின்றி இப்படிச் சொல்லி விட்டானே? இடியட்!

நீலாம்பரம் கண்டக்டரை விரைக்கப் பார்த்தாள். ஆனால் கண்டக்டர் அதற்கு டோன்ட் கே(எ)ர் போட்டான்!

எதிரிலிருந்த ஒரு நவயுவன் இந்தப் பரிதாபகரமான சம்பவத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் மனம் முற்றிலும் உருகிக் கரைந்து போய்விட்டது. அம்மாளின் உத்திர வைக்கூட எதிர்பார்க்காமல், நீலாம்பரத்திற்காகத் தைரியமாக ஒரு ஒன்றரை அணுவைக் கரியாக்கினான்.

நீலாம்பரத்திற்கு இச்செயல் அடாததாகப்பட்டதோ என்னவோ, அவள் முகத்தில் ஒருவித மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் தா(எ)ங்க்ஸ் ஒன்றை, கொஞ்சங்கூட மனதில் கவலையில்லாமல், செலவழித்தாள்!

"நோ...நோ...நோ மென்ஷன் ப்ளீஸ்!........."

நவயுவனுக்கு வாயெல்லாம் தங்கப் பல். பல்லைத் தட்டித் தங்கப் பல்லைப் பொறுத்திக் கொண்டவர்; நாக்கை எடுத்துவிட்டு வேறு நாக்கை மாற்றிக் கொள்ளும் யோசனையும் உண்டு!

தன் காதலியுடனிருப்பதில்—இதற்குள் காதலியா என்று வியப்பாச்சரியத் திகைப்பினால் நீங்கள் கண்களை அகல விரித்தால் ஒன்றும் பயனில்லை; அந்த ஷோக் சுந்தரம் நினைத்ததை நான் சொல்லுகிறேன் — பொழுது எவ்வளவு சடுதியில், கடிவாளமற்ற

குதிரையைப் போல, தனக்குத் தெரிந்த திக்குத் திகாந்தமெல்லாம் துள்ளிக் குதித்து ஓடி விடுகின்றது என்பதை அவன் ஆயிரத்தித் தொளாயிரத்தி நாற்பத்தொன்றும் தடவையாக உணர்ந்தான். தன் அழகு விஸ்தாரங்களையும், புரளும் செல்வத்தைப் பற்றியும், சுமக்கும் புகழைப்பற்றியும், ஒரு பெரிய வியாசம் படித்துக்காட்டி, தன் வீட்டின் விலாஸத்தையும் கொடுத்தான். நீலாம்பரம் வேறு பக்கம் பார்த்தபடியே தூங்கிக் கொண்டிருந்தாள். கண்டக்டர், "மைலாப்பூர் எல்லாம் இறங்குங்கோ!" என்று கூச்சல் போட்டதுந்தான் மெதுவாக எழுந்தாள்.

நம் மஹாராஜன் — மைனரின் பெயர்தான்!—மறுபடியும் ஒரு விஷ் பண்ணி, அவன் வீட்டு அட்ரஸை வற்புறுத்தி அவளுடைய மெதுவான காதுகளில் திணித்தான்.

ஞானோதயம் ஏற்பட்டது போல அவனுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவள் வீட்டு அட்ரஸை வாங்கிக்கொள்ளவில்லையே! தன்னுடைய பிரதாபப் புராணங்களை அலசி வைப்பதிலேயே அதை அவன் மறந்து விட்டான். உடனே மஹாராஜன் கீழே இறங்கினான். நீலாம்பரம் எந்த ரிக்ஷாவில் எவ்வளவு தூரம் போய்விட்டாளோ?

சரி, மஹாராஜன் வேலை மைலாப்பூரில் முடிந்தது. வேலை என்ன? எல்லாம் ஜல்ஸா ஜில்ஜில்தான். அந்த மோகனங்கியைச் சைனா பஜாரில் கண்டான். அவள் அழகாக இருந்தாள். மஹாராஜனுக்கு அவளிடம் காதல் கொள்ள வேண்டும் போலத் தோன்றியது. நீலாம்பரத்தைப் பின் தொடர்ந்தான். ஏதோ கருப்பண்ண சாமியின் அருள் அவன்மேல் சரிந்தது. ஒரு சான்ஸ் கிடைத்தது!

ஜார்ஜ் டவுனுக்குப் போகும் அடுத்த வண்டி மஹாராஜனைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு கிளம்பியது!

2

"என்னம்மா ஆம்பரம்! ஒரு மடையன் உனக்குக் காசு கொடுக்க முன் வந்தான்......"

"எஸ் பா(F)தர்!"

"நீயாகக் கேட்டாயா, அல்லது அவனே மேல்விழுந்து......"

"அவன் மேலே விழவில்லை. தானாகவே என்னைக் கூடக் கேட்காமல் என் டிக்கட்டிற்காகப் பணத்தைக் கொடுத்து விட்டான்!"

இதைக் கேட்டதும் நீலாம்பரத்தின் தந்தை கனகாம்பரராஜின் ஒட்டு மீசை துடியாகத் துடித்தது—கோபம் வந்தால் மீசை துடிக்கத்தான் வேண்டும் என்ற நீதி இருக்குமானால்!

அவர் உடனே கிளம்பினார், பிளாக் அவுட் காலத்தில்—அது இரவு எட்டரை மணி என்று கூட அவர் கருதவில்லை. அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தாஸியினிடம் டிக்கெட் பணங் கொடுத்துதான் பரிச்சியம் செய்து கொண்டவர். அந்த ஞாபகந்தான் அவரை சின்னா பின்னமாக்கி அங்கலாய்க்கச் செய்தது. அந்த நாடோடி ராஸ்கல் நீலாம்பரத்தை என்னவென்று எண்ணிவிட்டான்? தன் விலாஸத்தைக் கொடுத்துச் சென்றானே! அந்தப் பிளடி பெக்கருக்கு எவ்வளவு ஆணவம்?

* * *

"எய்ய்! ரிக்ஷா !!......"

காரில் இடங்கிடைக்கும் வழியைக் காணாததால், தன் கோபம் முழுவதும் அவிந்து போகும் வரையில் காத்துக்

கொண்டிருக்க மனமில்லாமல், ரிக்ஷாவின் உதவியை கனகாம்பாராஜ் நாடினர்.

எங்கேயோ தூங்கிக்கொண்டிருந்த ரிக்ஷாக்காரன் மெதுவாக வந்தான்.

"ஜார்ஜ் டவுனுக்கு வருகிறாயா?"

"வர்றேனுங்க......"

"......?......"

"......!......"

"ஏண்டா தயக்கம்?......"

"கொண்டு போய் உட்டுடுவேன். மறுபடியும் இங்கு கொண்டு வந்து விட முடியாது. நேரமாய்விட்டபடியால் அப்படியே என் குடிசைக்குப் போயிடுவேன்!......"

"அட பூல்! உன்னை எந்த மடையன் மறுபடியும் இங்கு கொண்டு வந்து விடும்படி சொன்னன்?...... சரி கிளம்பு......"

3

கனகாம்பாராஜ் மிகவும் ஆங்காரத்துடன் மஹாராஜனின் அறைக்குள் புகுந்தார். அவனுக்கு அடையாளம் தெரியாதபடியால் சந்தேகத்துடன் இவரை நோக்கலானன்.

"யாரப்பா, நீ தானு மஹாராஜன்?"

"ஆம், தாங்கள் யார்?......"

"நான் ஒரு கழுதை, அதைப்பற்றி உனக்கென்ன?......"

ஒரு வேளை ஸ்குரு லூஸோ என்று மஹாராஜன் ஜாடையாக அவரைப் பார்த்தான்.

"நீர் இன்று மாலை செய்த காரியம் செய்யக்கூடியது தானு?"

"......???......"

"ஒன்று மறியாதவரைப் போல வெறிக்க வெறிக்கப் பார்ப்பதில் புண்ணியமில்லை. என் மகள் ஆம்பரத்திற்கு நீர் டிக்கெட் காசு கொடுத்தீராமே?......"

"ஆம், ஆபத்திற்குப் பாபமில்லை என்று......"

"ஆபத்திற்குப் பாபமில்லையா, காமத்திற்கு கண்ணில்லையா?......"

மூன்ருவது பேர்வழி திடீரென்று உள்ளே நுழைந்து தன் முரட்டுக் குரலைக் காண்பித்து வைத்தான். அவன் ரிக்ஷாக்காரன்.

"என்ன சாமி, காசு கொடுக்காமே உள்ளே வந்து உக்காந்துகிட்டீங்க. நான் ஊட்டுக்குப் போவணும்......"

கனகாம்பாராஜ் மஹாராஜனை ஒரு தடவை வெறிக்கப் பார்த்து, கோபமுள்ள கைகளைத் தன் பையில் விட்டார். பை காலியாக இருந்தது. தனக்கிருந்த சினத்தில் பர்ஸை எடுத்து வர மறந்து விட்டார் போலும்!

"நேரமாவுது சாமி......"

"இரேண்டா.........நீ மறுபடியும் என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டு காசை வாங்கிக்கொள்......"

"நல்ல மரியாதை! நான்தான் கிளம்பரப்போவே கண்டிஸனு சொல்லிட்டேனே, திரும்பி வர முடியாதுன்னு......"

"என்னிடம் காசு இல்லேயே..."

"எவனுவது காசில்லாமே ரிக்ஷா மேலே ஏறுவானு?......"

கனகாம்பரராஜுக்கு அவமான மாகப் போய்விட்டது. தான் ஒரு வனே அவமானப்படுத்த வந்திருக்கும் பொழுது இந்த ரிக்ஷாக்காரப் பயல் இப்படி தாறுமாருகப் பேசுவது அவ ரால் பொறுக்க முடியவில்லே. ஆனல், ரிக்ஷாக்காரனுக்குத் 'தண்ணி' ஞாப கம் வந்து விட்டபடியால் இதுதான் பேசுகிருேம் என்றறியாமல் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

கனகாம்பராஜின் முகம் பரிதாப கரமாக இருந்தது. என்ன செய்வ தென்று அவருக்குத் தெரியவில்லே.

மஹாராஜன் அவரிடம் ஒன்றும் கேட்கவில்லே. மெதுவாக ரிக்ஷாக் காரனிடம் கூலியைக் கொடுத்து அவனே அனுப்பி வைத்தான்.

"என்ன சொன்னீர்கள்?........."

மஹாராஜன் மறுபடியும் ஆரம்பித் தான்.

"நான்......ன்ன்......"

"......!!!......"

நீங்கள் சமயத்தில் செய்த உதவி யைப் பற்றி நீலாம்பரம் மிகவும் புகழ்ந்து பேசிஞள். நீங்கள் நாளேக் குக் கண்டிப்பாக எங்கள் வீட்டிற்கு வரவேணும்......என் அட்ரஸ் இது தான். இது சொல்லவே வந்தேன்...'

"ஓ! அவசியமாக வருவேன்......"

கனகாம்பராஜ் தன் விலாஸத்தைக் கொடுத்து வைத்தார்.

"சந்திரோதயம்"

விளம்பர விகிதம்

அட்டையின் பின்பக்கம்	ஒரு தடவைக்கு	ரூ.	50
,, உள்பக்கம்	,,	ரூ.	35
சாதாரண பக்கம்	,,	ரூ.	25
அரைப்பக்கம்	,,	ரூ.	15
கால்பக்கம்	,,	ரூ.	7-8

நீடித்த விளம்பரங்களுக்கு சந்திரோதயம் விளம்பர மானேஜருக்கு எழுதவும்.

நங்கையர் உலகம்

பம்பாயில் நம்மவர்கள்

"ராஜீவி"

செல்லம் அம்மாமி ஒரு பழுத்த விவேகி. சிறுவயதில் குடும்பத்தில் ரொம்பக் கஷ்டப்பட்டவள். மாமியார், நாத்தனர் கொடுமைகளுக்குள்ளாகியும் பொறுமையாக நடப்பதில் நிகரற்றவளாக இருந்தாள். அவளுக்கு இருப்பதெல்லாம் சாரதா என்ற ஒரே ஒரு பெண்தான். அந்தப் பெண்ணுக்கும் விவாகமாகிவிட்டது. செல்லம் அம்மாமி பகவத்கீதை ராமாயணம் முதலியவற்றைப் படித்துக் கொண்டு சத்காலக்ஷேபம் செய்து வந்தாள். அவளுக்கு ஸம்ஸ்கிருதத்திலும் கிரந்தத்திலும் நல்ல தேர்ச்சியுண்டாகையால் பகல் பொழுதில் சுலோகங்கள் வாசித்து அவற்றிற்குப் பொருள் கூறுவாள். தெய்வத்தின் மேல் நம்பிக்கையுள்ள சில பெண்கள் பகல் வேளையில் அவள் உபன்னியாசத்தைக் கேட்டு மகிழ்ச்சியுறுவார்கள். செல்லம் அம்மாமிக்கு இயற்கையில் சங்கீத ஞான முண்டாகையால் வேதாந்த பாட்டுக்களையெல்லாம் மனமுருகப்பாடுவாள். நம் நாட்டுப் பெண்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று வெகு அழகாக விவரித்துக் கூறுவாள். சில நாகரீக நாரீமணிகள் அவளை சுத்தக் கர்னாடகம்' என்றும் பைத்தியம் என்றும் கேலி செய்யாமலில்லை. புரளி செய்வதற்கென்றே சிலர் பகல் பொழுதில் செல்லம் மாமி வீட்டில் முகாம் போட்டுவிடுவார்கள். அன்று முத்து கமலாவை அழைத்துக் கொண்டு செல்லம் மாமி வீட்டுக்குச் சென்றாள். வெள்ளிக்கிழமை யாதலால் தாம்பூலம் வாங்கிக் கொள்ள ஏராளமான சுமங்கிலிகள் வந்திருந்தனர். செல்லம் மாமி வெகு சுவாரஸ்யமாக "பதிவிரதா தர்மத்தைப்பற்றி பிரசங்கித்துக் கொண்டிருந்தாள். "பெண்கள் இரைந்து பேசக்கூடாது. சப்தம் போட்டு சிரிக்கக்கூடாது. தனியே தெருவில் போகக்கூடாது. வீட்டில் வம்புக்காரக் கூட்டத்தைச் சேர்க்கக் கூடாது. சாளரத்தின் வழியாகவும், மாடியிலிருந்தும் தெருவில் போகிறவர்களைக் கவனிக்கக்கூடாது" என்று இப்படியாகச் சொல்லிக் கொண்டே போகும் போது கமலம் குறுக்கிட்டாள்.

"இந்தக் காலத்தில் அப்படியெல்லாம் இருப்பது முடியாத காரியம். அதுவும் இந்த பம்பாயில் தனியே போகாமலும், சினேகிதர்களுடன் பேசாமலும் எப்படியிருக்க முடியும்? புருஷர்கள் எட்டுமணிக்குச் சாப்பிட்டு விட்டுப்போனால் இரவு எழு மணிக்குத்தான் வீடு திரும்புகிறார்கள். காய்கறி முதற்கொண்டு நாம்தான் வாங்க வேண்டியிருக்கிறது. வெளியே போகாமல் இருந்தால் வீட்டுக்காரியம் நடக்க வேண்டாமா? கொட்டு கொட்டு என்று தனியே எப்படி உட்கார்ந்திருப்பது?" என்றாள்.

"அதெல்லாமாவது கிடக்கட்டும். அகமுடையானைச் சமைக்கச் சொல்லி விட்டு ஊர் சுற்றாமலிருந்தால் போதாதா? காலை எழு மணிக்கு சுடச்சுட சோற்றை வயிற்றில் கொட்டிக் கொண்டு புருஷன் ஆபீஸுக்கு ஓடுகிறான். இரவு வீட்டுக்கு வந்தால் அவனுக்குக் கிடைப்பது ஒரு புளித்த

மோருஞ்சாதந்தான். பகலெல்லாம் இந்தப் பொம்மனாட்டிகள் தடிகள் மாதிரி ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது கள். ஊர் என்ன செய்யும்? பொழுது போகாவிட்டால் பிறர் வீட்டுக்குப்போய் வம்பளக்க வேண்டுமா? பத்துமணியானால் எல்லாம் எங்கு போகலாம் என்று அலைகிறதுகள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் காபி வேளைக்குப் போய்விட்டு ஓசியில் காப்பியையும் டிபனையும் ஒரு அமுக்கு அமுக்கிவிட்டு வீடு வந்து சேருகிறதுகள். சில நாட்கள் புருஷன் வரும் சமயத்தில் பெண்டாட்டி வீட்டிலிருக்க மாட்டாள். கதவு பூட்டியிருக்கும். அவன் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று "என் பெண்டாட்டி இங்கிருக்கிறாளா?" என்று சாவிக்காக அலைவான். அவனுக்குக் கிடைப்பதென்னமோ ஒரு புளித்த மோருஞ்சாதந்தான்" என்று காந்திப்பாட்டி சொல்லும் போது மீனாக்ஷிக்குக் கோபம் வந்துவிட்டது "என்ன பாட்டி! புளித்த மோருஞ் சாதம் என்று கேலி செய்கிறீர்கள்? இந்த பம்பாய் ஊரில் ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இரண்டு வேளை சமைத்துக் கட்டுமா? வீட்டு வாடகையே இரண்டு அறைகளுக்குக் குறைந்தது இருபத்தைந்து ரூபாய் ஆய்விடுகிறது. காய்கறியும் அனியாய கிராக்கி. அவரவர்கள் கணவன்மாருக்குச் செய்ய அவரவர்களுக்கு அக்கரையில்லையா, என்ன?" என்று ஒரு போடு போட்டாள்.

"அது வாஸ்தவந்தான். 'பம்பாயிலிருக்கிறான். அவனுக்கென்ன? அகமுடையாளாச்சு அவனாச்சு! சம்பளம் ஐம்பது ரூபாய். இரண்டு பேருக்கு என்ன செலவு? ராஜாமாதிரி இருக்கலாம்" என்று நம் ஊரில் இருப்பவர்கள் நீட்டி முழக்கிக் கொண்டு சொல்லிவிடுகிறார்கள். வந்து பார்த்தால்தான் விஷயம் புரியும். வயிற்றுப் பிழைப்புக்காக நம்மவர்கள் ஆயிரம் மைல்களுக் கப்பால் வந்தும் கஷ்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள்." என்றாள் அம்மாளு மாமி.

"நான் பதிவிரதா தருமத்தைப் பற்றிச் சொல்லப்போக அது எதிலோ வந்து முடிந்துவிட்டது. இன்றைக்கு நல்ல வேளையில் ஆரம்பிக்கவில்லை போலிருக்கிறது. ஒரு நல்ல பாட்டாவது பாடு முத்து!" என்றாள் செல்லம் மாமி.

"நாழியாகிவிட்டது மாமி. மணி இரண்டாகிறது. பால்காரன் வந்து விடுவான். இன்னொரு நாள் பாடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே முத்து எழுந்திருந்தாள். மற்றவர்களும் எழுந்திருக்கவே கூட்டம் கலைந்தது.

இனாம்! "சிற்றின்ப சாகரம்" புஸ்தகம் இனாம்!!

இன்றே எழுதுங்கள்! வைத்திய ஆலோசனை இனாம்!!!

MALAYALA VAIDYA NILAYAM
POST BOX No 53. MADRAS.

எமது வைத்திய நிலையத்தில் சகல வியாதிகளுக்கும் சாஸ்திரீகமான ஔஷதங்கள் கிடைக்கும். வைத்தியம், கர்ப்பத்தடை, ஆயுள் விருத்தி. நோயற்ற வாழ்வு முதலியவைகள் எடுத்துக் காட்டும் "**சிற்றின்ப சாகரம்**" புஸ்தகத்தை இனாமாக பெறலாம். புஸ்தகம் அனுப்புவதற்கு தபால் சிலவிற்காக 1 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

மலையாள வைத்திய நிலையம்,
தபால் பெட்டி நெ. **53**, மதராஸ்.

கௌரவப் போர்

"கார்த்திகை"

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்த யுத்தத்தைக் குறிப்பிடவில்லை. தினசரி நம் வாழ்க்கையில் கௌரவத்திற்காக நடத்துகிறோமே அதைத்தான் குறிப்பிடுகிறேன். சரித்திரங்களில் நூறுவருட யுத்தம் — பத்துவருட யுத்தம் என்றெல்லாம் வாசித்திருப்பீர்கள். ஆனால் இது யுகக் கணக்காய் நடந்து வருகிற சமர். மனிதன் பிறக்கும் போது அவன் உடலுடன் ஒட்டிய வியாதி.

எதற்கெடுத்தாலும் கௌரவத்தை விரும்புகிறது மனித உள்ளம். அதற்காக 'மகத்தான' தியாகங்களையும் செய்யச் சித்தப்படுகிறது. ஆனால் வாட்டுக் கௌரவத்திற்காக கச்சை கட்டிக்கொண்டு யுத்தம் நடத்துபவர்கள் மீது இரக்கப்படாமலிருக்க முடியாது.

கொஞ்ச நாளைக்கு முன் ரயிலில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. என் பக்கத்தில் ஒருவர். ஆஜானுபாகு. நன்ருய்ப் படித்தவர் போலக் காணப்பட்டார். ஆழ்ந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த சமயம் டிக்கட் சோதிப்பவர் வந்தார். இரண்டு மூன்றுதரம் 'டிக்கட், டிக்கட்' என மெல்லிய குரலில் கூறினர். அது அவர் காதில் விழவில்லை. அவன் கொஞ்சம் துடுக்கான பேர்வழி போலிருக்கிறது. இல்லாவிட்டால் "எய், டிக்கட் எடய்யா" என்று கூறியிருப்பானு? இது மட்டும் அந்த மனுஷன் காதில் பாய்ந்து உறங்கிக் கொண்டிருந்த அவர் ஆவேசத்தை எழுப்பியது. அவ்வளவு தான் பார்க்கணுமே! கௌரவப்போர் ஆரம்பமாகிவிட்டது. அவர் பேச, டிக்கட் சோதிப்பவர் பேச, பேச்சு தடித்தது. இதுவரை சும்மா இருந்த அடியேன் தலையிட்டு சமரசம் பண்ணிவைத்தேன். சமாதானம் பண்ணிவைத்ததும் போதும் நான் பட்ட பாடும் போதும். மதராஸ் வருகிறவரை "என்ன சார் நீங்கள் மட்டும் தலையிட்டிருக்கா விட்டால், அந்தப் பயலை கதிகலங்க வைத்திருக்க மாட்டேனு? என்று குத்திக் காட்டிக்கொண்டேயிருந்தார். என்ன இருந்தாலும் கௌரவம் பாருங்கள்! விட்டுக் கொடுக்க யாருக்குத்தான் மனம்வரும்.

ஒருவரிடத்து ஒருவர் பேசும் விதத்தில்தான் கௌரவம் ரொம்ப அடிபடுகிறது. 'நீங்கள்' என்கிற இடத்தில் 'நீ' என்ருே 'நீர்' என்ருே சொல்லிவிட்டால் வந்தது ஆபத்து. மதராஸிலிருந்து என் முதலியார் நண்பர் வந்திருந்தார். அவர் பேசும் தினுசு, தெற்கத்தியாருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவரைக் கூட்டிக்கொண்டு போகும் போதெல்லாம் என் மனம் 'பக், பக்'கென்று அடித்துக் கொள்ளும். யாரையும் பார்த்து, "என்னுப்பா, ரொம்ப ரொம்ப பேசிறியே" என்று சொல்லி விடுகிருர். ஆனல் அவர் மனசில் தப்பாக நினைத்துப் பேசவில்லை. சுபாவமே அப்படி!

ஆனல் இந்தத் தொல்லை யெல்லாம் இல்லாத மொழி ஆங்கிலம். நீ, நீர், நீங்கள் எதற்கும் ஒரே வார்த்தை. தமிழில் பேசும் போது கௌரவத்தைக் கவனிக்கும் ஆசாமிகள் ஆங்கிலத்தில் பேசினல் உச்சி குளிர்ந்து விடுவார்கள். மட்டு, மரியாதையை அறிவிக்க இயலாத மலட்டுப் பாஷை மீது அத்தனை மோஹம்!

திருநெல்வேலிப் பிராந்தியத்தில் பழக்கத்தில் ஒரு கதை இருந்து வருகிறது. வீண் படா டோபஸ்தர்களை "எது பட்டணத்து முதலியார் ஜம்பமா" என்று கேலி செய்கின்றனர். முதலியார் வீட்டு அடுப்பை கோழி கிண்டினாலும் வெளியில் வந்து விழும் எச்சிலையில் ஒரே நெய் மயமாகத் தெரியுமாம். முதலியார் நெய்யில் மிதக்கிறார் என்று ஊரார் நினைத்துக் கொள்ள விளக்கெண்ணெய் பூச்சு நடக்கிறதாம். இது அசல் கட்டுக் கதையாகத்தானிருக்க வேண்டும். தயவு செய்து பட்டணத்துக்காரர் என்னுடன் சண்டைக்கு வர வேண்டாம்!

இன்னொரு வேடிக்கை. பிறர் நம்மை ஒரு விதமாக எண்ணிவிடுவார்களே என்று 'அசட்டுப்பிசட்' டென்று நடந்து கொள்வது.

ராமனாதன் எப்பொழுதுமே 'மினுக்'காக அலைவான். வருமானமில்லாத வேலை நிறைய உண்டு. அன்று சினிமாவிற்குப் போகும் போது பெஞ்சு டிக்கட் வாங்கவேண்டுமென்ற நோக்கத்தில்தான் ஜன்னலண்டை போனான். பக்கத்தில் யாரோ அங்கவஸ்திரத்தை இழுப்பது போலத் தோன்றியது. திரும்பினான். "யார், ஹலோ! சங்கர் சினிமாவிற்கா? நானும் வருகிறேன்" என்றான். பெஞ்சு என்று சொல்லப்போன வாய் குழறி சோபா என்று வந்தது. ரூபாய் ஒன்று அணா ஒன்பது காலி. பாக்கி சில்லரை எழணாவை வாங்கி பாக்கெட்டில் போட்டுக்கொண்டான். சங்கர் பணக்காரவீட்டுப் பிள்ளை; சோபாவைத் தவிர வேறு எதற்கும் போக மாட்டான். எனவே ராமனாதனின் செயலில் ஆச்சரியமில்லை. உள்ளே நுழைந்ததும் விளக்குகள் அணைந்தன. தடவிப் பார்த்தான். சங்கரைக் காணமுடியவில்லை. அப்படியே தனியாக ஸோபாவில் சாய்ந்தான். படம் பார்க்கவே ஓடவில்லை. சாயங்காலம் அப்பா மருந்து வாங்கக் கொடுத்த ரூபாய் இரண்டு. எப்படியும் 'கமிஷன்' நாலணா தேறும் என்ற தைரியத்தில் சினிமா போகத் தீர்மானித்தான். ஆனால் இடையில் வரட்டுக் கௌரவம் வந்து குறுக்கிட்டது. ஒரே புழுக்கம்; அதை விட அவன் மனம் ரொம்பப் புழுங்கியது.

'இண்டர்வெல்' மணி யடித்தது. மின்ஸார விளக்குகள் ஜகஜ்ஜோதியாய் மின்னின. ராமனாதன் சுற்றும் சங்கரைத்தேடினான். கடைசி 'பாக்ஸ் ஸீட்டில்' சங்கர் பாரி சகிதம் காக்ஷியளித்தான். அலக்ஷியப் புன்னகையுடன், "ஓஹோ, நீயும் வந்திருக்கிறாயா" என்று கூறிவிட்டு மனைவி பக்கம் திரும்பினான். ராமனாதனை அவன் சட்டை செய்யவில்லை. அப்படியே எழுந்து போய் விடலாமா வென்று எண்ணினான்.

மீண்டும் விளக்குகள் அணைந்தன. 'விறு விறு' வென்று வெளியே வந்தான். வீட்டினுள் நுழைந்தானோ இல்லையோ தகப்பனாரின் குரல் வந்தது. "எண்டா மருந்து வாங்கினாயா? இருமல் தாங்க முடியலேடா" என்றார். ராமனாதன் மனமாறப்புழுகினான். "இன்னிக்கு ஸ்டாக் ஆயிடுத்தாம். நாளை கிடைக்குமாம்" என்று விழுங்கிக் கொண்டே கூறினான்.

அன்றிரவை ராமனாதனின் தந்தை இருமிக்கொண்டே கழித்தார்.

* * *

கௌரவம் வேண்டியதுதான். அது உண்மைக் கௌரவமாக இருக்க வேண்டும். அல்ப விஷயங்களிலெல்லாம் அதை எதிர்பார்க்கக் கூடாது. என் சுதந்திர புருஷன் என்ற ஒரு கௌரவம் மட்டும் இருந்தால் போதுமன்றோ?

பாட்டியின் ஆசீர்வாதம்

வி. வி. சுப்ரமணியன்

"இந்தச் சிறிய வயதில், உனக்கு இவ்வளவு ஞாபகமறதி யிருந்தால், யார்தான் உத்தியோகம் கொடுக்கப் போகிறார்களோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்." என்றாள் என் பாட்டி, மிகவும் மனக் கசப்புடன்.

காரணம் ஒன்றும் பிரமாதமில்லை. ஆற்றங்கரைக்கு, எண்ணெய் ஸ்நானத்திற்காக, எண்ணெயும் சீக்காயும் எடுத்து வைத்தாள் என் பாட்டி.

ராமுவுக்கோ, ஆற்றங்கரையில் நீந்துவதென்றால் ரொம்பவும் ஆசை. எவ்வளவோ அறைகள் பட்டும், அவனுக்கு அந்த ஆசை மாத்திரம் விட்டபாடில்லை. அவன் அன்று என்னைப் படுத்தியபாட்டில், சீக்காயை எடுத்துப் போக மறந்துவிட்டேன். எண்ணெய் தேய்த்துக் கொண்ட பிறகுதான், சீக்காய் கொண்டுவராதது ஞாபகத்திற்கு வந்தது.

"என்ன செய்கிறது, ராமு" என்றேன்.

"பரவாயில்லை, நான் கொண்டுவந்திருப்பதை இரண்டு பேரும் தேய்த்துக் கொள்ளலாம்" என்று சிரிப்புப் பொறுக்கமாட்டாமல் சொன்னான் ராமு.

வேறு வழியில்லாததால், பாதி எண்ணெய் போயும், பாதி எண்ணெய் போகாமலும் குளித்துவிட்டு வீடு திரும்பினோம்.

ராமுவுக்கோ, பாட்டி என்னை என்ன சொல்கிறாள் என்று பார்க்க வேண்டுமென்ற ஆசை. பாட்டியும் என்னை ஒரு அத்தியாயம் வைது விட்டு, மேற்கண்ட ஆசீர்வாதத்தையும் பண்ணினாள்.

நானும், ராமுவும் உத்தியோகத்திற்காக பட்டணம் வந்தோம். வந்த ஒரு மாதத்தில் 1 குயர் பேப்பரும், ஒரு கட்டு கவரும் காலியாகிவிட்டன. "இனி பாட்டியிடம் பணம் கேட்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஹோட்டலிலாவது வேலை செய்ய வேண்டியதுதான். என்ன ராமு, உன் அபிப்பிராயம்?" என்றேன் விரக்தியுடன்.

"அவசரப்படாதே, இந்தப் பாழாய்ப் போன யுத்தம் வந்திராவிடில், இதற்குள் வேலைகிடைத்திருக்கும். இன்னும் ஒரு மாதம் பார்ப்போம். பிறகு உன் யிளானைப்பற்றி யோசிக்கலாம். மனதை மாத்திரம் தளரவிடாதே." என்று தைரிய மூட்டினான் ராமு.

"எனக்கென்னவோ நம்பிக்கையில்லை, உத்தியோகம் கிடைக்குமென்று. எதற்கும் நீ சொல்லுவது போல் ஒரு மாதம் பல்லைக் கடித்துக் கொண்டு தள்ளி..........."

"சார்" என்ற குரல் வாசலில் கேட்டது. கையில் ஒரு கவருடன், தபால்காரன் நின்று கொண்டிருந்

தான். என் ஹிருதயம் மோட்டார் என்ஜினைப்போல் அடித்துக் கொண்டது. ராமுவுக்கோ ஆத்திரம் தாங்க முடியவில்லை.

"நான் சொல்லவில்லையா மணி. சீக்கிரம் உடை! உத்தியோகம் ஆனதும் என்னையும் கொஞ்சம் கவனித்துக்கொள்" என்றான் கிண்டலாக.

கடிதத்தில் என் ஸர்ட்டிபிக்கேட்டுகளை எடுத்துக் கொண்டு உடன் என்னை வந்து பார்க்கும்படி எழுதியிருந்தது.

"மணி! நீ என்ன இருந்தாலும் யோகசாலி. பெரிய கம்பெனியிலிருந்தல்லவா லெட்டர் வந்திருக்கிறது. நீ போய் என்னையும் அழைத்துக் கொள்ளும்படியான வழியைப் பார்" என்றான் குதூகலத்துடன்.

"வேலை கிடைத்த பிறகல்லவா, ராமு, அவைகளைப்பற்றி யோசிக்க வேண்டும்? இப்பொழுது நடக்க வேண்டியதைச் சொல்" என்றேன்.

நன்றாக "டிரஸ்" பண்ணிக்கொள். அதுதான் மிகவும் முக்கியம் இந்த வெள்ளைக்காரர்களுக்கு. ஸர்ட்டிபிக்கேட்டுகளை எடுத்துக்கொள். தாமதமின்றிப் புறப்படு. நீ பேசுகிற பேச்சில், அவன் உனக்கு உடன் வேலை கொடுக்கவேண்டும். தெரிகிறதா!" என்றான்.

அவசர அவசரமாக "டிரஸ்" பண்ணிக்கொண்டேன்.

"சுவாமியைப் பிரார்த்தித்துக் கொள்" என்றான் ராமு.

என் பெட்டியிலிருந்து ஒரு சாமானை எடுக்கவேண்டுமானால், குறைந்தது ஒரு வருஷம் பிடிக்கும். ஏதோ நல்லகாலம், சர்ட்டிபிக்கேட்டுகள் அடங்கிய கவர், பத்து நிமிஷத்தில் கிடைத்துவிட்டது.

ராமு வழியனுப்பிய 15 நிமிஷத்தில், கம்பெனிக்குள் நுழைந்து, என் பெயரை பியூனிடம் அனுப்பினேன். அவனும் சிறிது நேரத்தில் திரும்பி வந்து, "துரை உங்களைப் பார்க்க விரும்புகிறார். உள்ளே போகலாம் ஸார்" என்றான்.

"குட்மார்னிங் ஸார்" என்றேன் உள்ளே நுழைந்ததும்.

அவரும் தலையை அசைத்தவாறு ஒருமுறை என்னை ஏற, இறங்கப் பார்த்துவிட்டு, "எங்கே, உன் ஸர்டிபிகேட்டுகளை எடு" என்றார்.

உடன் நான் கொண்டுவந்திருந்த கவரிலிருந்த நாலைந்தில், ஒன்றை அவரிடம் பயபக்தியுடன் கொடுத்துவிட்டு, அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். நான் கு வரி வாசித்ததும், அவர்முகம் சிவந்துவிட்டது.

"நான் உங்களுடைய ஸர்ட்டிபிகேட்டுகளைப் பார்க்கவிரும்பினேனே ஒழிய, உங்கள் சொந்த சமாசாரங்கள் அடங்கிய லெட்டரைக் கேட்கவில்லை" என்றார்.

எனக்குத் தூக்கி வாறிப் போட்டுவிட்டது.

"அவசரத்தில் நான்......" என்று முடிக்குமுன் அவர், "இவ்வளவு ஞாபக மறதியுள்ளவர்களை, வேலைக்கு வைத்துக் கொள்வதில் என்ன பிரயோஜனம்? போகலாம்" என்றார் கண்டிப்பான குரலுடன்.

* * *

"காயா, பழமா?" என்றான் ராமு.

"ராமு! பாட்டி செய்த ஆசீர்வாதம் ஞாபகமிருக்கிறதா!" என்றேன்.

சிரித்துப்பார்

அவன் கடமை

கடற்கரையைக் காப்பவன்:—(தண்ணீரில் 'லபோ லபோ' என்று அடித்துக் கொள்ளும் ஒருவனைப் பார்த்து):—ஐயா, கடலில் 8 மணிக்கு மேல் நீந்த அனுமதி கிடையாது. இப்போது சரியாக மணி எட்டாகி விட்டது.

நீரிலிருப்பவன்:—நான் குளிக்கவில்லை. தவறி விழுந்து மூழ்கிக் கொண்டிருக்கிறேன். உதவுங்கள்!

சபதம் தவருதவன்

ஒருவன்:—சுந்தரம் தன் கலியாணத்தை ஓர் ஏரோப்ளேனில் நடத்த வேண்டும் என்று விரும்புகிருனமே! என் தெரியுமா?

மற்றவன்:—தெரியாதே! ஒரு வேளை டம்பத்திற்காக இருக்கலா மென்று யோசிக்கிறேன்.

முதல்வன்:—இல்லை. அவன் 'நான் இம் மண்ணின்மீது ஒரு பெண்ணையும் விவாகம் செய்து கொள்ளப் போவதில்லை' என்று சபதம் செய்திருக்கிருன்.

மன்னிப்பா?

ஒருவன் தன் மாணவனுக்குத் துப்பாக்கி சுடக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான். தூரத்தில் ஒரு குறியை வைத்து அதைப் பார்த்து சுடச் சொன்னுன். குறிதவறியதால், கற்றுக் கொடுப்பவன் மேல் விழப் பார்த்தது. அவன் தெய்வச் செயலாய் தப்பி விட்டான்.

கற்றுக்கொடுப்பவன்:— (கோபமாக) ஜாக்கிரதையாய்ச் சுடுவதற்குக் கொஞ்சம் தான் தவறி விட்டாய்.

கற்பவன்:—அப்படியானல் மன்னிக்கவும்.

அப்பாவா கழுதை?

ஒரு வண்ணுன் தன் கழுதையை விற்பதற்கு விளம்பரம் செய்திருந்தான். ஒருவன் அவன் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டவே, வண்ணுனின் மகன் அதைத் திறந்தான். 'விற்கப்போகும் கழுதையைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறேன்; கழுதை எப்படிப்பட்டது?' என்று கேட்டான். சிறுவன் சாவதானமாக 'அப்பா, உன்னை யாரோ தேடுகிருர்' என்ருன்.

ஞாபகமறதி

ஒரு கிழவி:—40 வருடத்துக்கு முந்தி உம்மைக் கலியாணம் செய்து கொள்ளும்படி என்னைக் கேட்டீரல்லவா?

கிழவன்:— (ஞாபகமறதியாக) ஆமாம் நான் சொன்னபடி நீ செய்தாயா?

புதுப்பையன்

ஒரு பாடசாலையில் புதுப்பையன் ஒருவன் வந்து சேர்ந்தான். உபாத்தியாயர் அவனைப் பார்த்து 'உன் பெயரென்ன' என்று கேட்டார்.

பையன்:—சீனிவாசன்.

உபாத்தியாயர்:—நீ உன் உபாத்தியாயரிடம் பேசும் பொழுதெல்லாம் 'ஸர்' என்று சொல். அதுவே மரியாதையானது.

பையன்:—'ஸர் சீனிவாசன்'

நல்லவழி

"ராமா என் மகனுக்குக் கழுதை மாதிரி வயதாகியும் ஒன்றுக்கும் உபயோகமில்லாமலிருக்கிறுன். அவன் பூமிக்குப் பாரமாகவே இருக்கிருனென்று எண்ணுகிறேன்."

"அப்படியானல் அவனை 'ஏரோப்ளேன் டிரைவர்' ஆகச் சொல்லும்"

சந்தேகம்

பிரபு ஒருவர்:—(டெலிபோனில்):— நீ தானு என் கண்ணே?

பதில்:—ஆமாம். தாங்கள் யார்?

எதிர்பார்த்தல்!

கடன்கொடுத்தவர்:— உங்கப்பா எங்கே? அவரைப் பார்க்கணும்.

சிறுவன்:—உங்களைத்தான் அவரும் இதுவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கடன்கொடுத்தவர்:—நான் வருவேனென்று எப்படித் தெரியும்?

சிறுவன்:—இப்பொழுது தான் வெளியே போனுர்.

குறிப்பு :—நேயர்கள் அனுப்பும் துண்டு விகடங்கள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும். ஆனல் அனுப்பப்படும் விகடங்கள் இரவலாயிராமல் இருப்பதோடு, உண்மையில் சிரிப்பை மூட்டுவதாகவும் இருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

ரூ. 1,550 இனம்

சித்த வசீகர கவசம்:—ஆண், பெண் யாராயிருப்பினும், எவ்வளவு பிடிவாதமாயிருந்தாலும், நீங்கள் நினைத்த மாத்திரத்தில் வசீகரிக்கப்பட்டு, உங்களுக்கு அடங்கி நடப்பார்கள். விலை:—தங்க மூடியிட்டது ரூ. 5/15. வெள்ளி ரூ. 2/8. தாமிரம் ரூ. 1/12. (3-க்கு விலை ரூ. 4/15.)

லக்ஷ்மி கவசம்:—ஐச்வர்யம் வேண்டுபவர்கள் இதை அணியவேண்டும். கிருஹக் கோளாறுகளை வென்று வெற்றி அளிக்க வல்லது. மேலும், விரோதிகளை வெல்லும், பரீட்சை, வியாபாரம், உத்தியோகத்தில் வெற்றி அளிக்கும். சந்ததி வேண்டுபவர்கள் இரு கவசங்கள் அணியவேண்டும். ஆணுக்கு ஒன்றும், பெண்ணுக்கு ஒன்றும். விலை:—தாமிரம் ரூ. 1/12. (3-க்கு விலை. ரூ. 4/15.) வெள்ளி. ரூ. 2/8. தங்கம் ரூ. 5/15. தபால் செலவு தனி. ஆனல் ஒரே தரம் இரண்டு கவசங்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

குறிப்பு:—(1) இதற்கு உள்ளதாக உள்ள குணங்கள் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1550 இனம். (2) குணமில்லாவிடில் பணம் வாபஸ். இதை உபயோகிப்பதற்கு யாதொரு சிரமமும் எற்படாது.

Shri Swami Sat Narayan Jeotish Ashram, (2-C.T.) JULLUNDUR CITY.

பாப்பா பகுதி:

காட்டிலே நடந்தது

பி. எஸ். எஸ்.

ஒட்டகம் ரொம்ப நாளாய் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தது. பார்க்காத ஆபீஸ் பாக்கியில்லை! எங்கு போனாலும் "வேலை காலியில்லை'' என்ற பதிலே அதற்குக் கிடைத்தது. கடைசியில் அதற்கு ஒரு வேலையும் அகப்படாததால் பிரமாதமாக யோசித்து விட்டு, ஒரு முடிவுக்கு வந்தது!

இரண்டு நாள் கழித்து காட்டில் ஒரு இடத்தில் "காலரா கபே'' என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது! உள்ளே சென்று பார்த்ததில் ஏககூட்டம்! ஏகப்பட்ட மிருகங்கள் தனித் தனி மேஜையருகில் உட்கார்ந்து கொண்டு சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தன. வாசல்படி அருகில் ஒட்டகம் மேஜையும் நாற்காலியும் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தது! அதன் பெட்டியில் ஏகப்பட்ட பணம் குவிந்து கொண்டிருந்தது!

இவ்விதம் ஒட்டகம் ஆயிரக்கணக்கில் பணம் சேர்த்து விட்டது. இப்பொழுது அது தனி பங்களாவில் வசித்தது. வனராஜனான சிங்கத்திற்கு அடுத்தபடியாக ஒட்டகந்தான் ஸ்தானம் பெற்றது. சிங்கத்திற்குக்கூட அதனிடம் தனி மதிப்பு உண்டு.

வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த கரடி, நரி, பூனை போன்ற மிருகங்கள் ஒட்டகத்தைக் கண்டு வயிறெரியாமல் இருக்குமா? அவைகள் ஒட்டகத்தை எப்படியாவது கவிழ்க்க வேண்டுமென்று சதியாலோசனை செய்தன.

அன்றைய தினத்திலிருந்து 'காலரா கபே'யில் உள்ள தின்பண்டங்களும், பக்ஷணங்களும் திருடப்பட்டன. ஒட்டகம் இதைக்கண்டு மிகவும் வருத்தப்பட்டது.

யார் தின்பண்டங்களைத் திருடுகிறார்கள் என்று கண்டு பிடிக்க ஒரு நாள் இரவு முழுவதும் ஒட்டகம் ஹோட்டலில் ஒளிந்து கொண்டிருந்தது. மேற்சொன்ன மிருகங்களே சுவர் வழியாக ஏறிக்குதித்து உள்ளே சென்று, வயிறு புடைக்கத் தின்பண்டங்களைத் தின்றுவிட்டு, தம் வீட்டிற்கும் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டு சென்றன! தின்பண்டங்கள் எல்லாம் கொள்ளை

போவதைக் கண்ணுல் கண்ட ஒட்டகத்திற்கு வயிற்றைப் பற்றிக் கொண்டு எரிந்தது. ஒட்டகம் தனித்து இருக்கையில் அத்தனை திருட்டு மிருகங்களையும் எதிர்ப்பது கடினமென்று ஏங்கியிருந்து விட்டது.

இவ்விதம் தினம் திருட்டுப் போய்க் கொண்டேயிருந்தது. இதனுல் ஒட்டகத்திற்கு நஷ்டமேற்பட ஆரம்பித்தது. இதைத் தடுக்க வழியின்றி ஒட்டகம் தவியாய்த் தவித்தது. கடைசியாக காட்டிற்கு அரசனுன சிங்கத்திடம் சென்று நடந்தவை களைச் சொல்லி முறையிட்டது. சிங்கம் பல தடவை 'காலராகபே' யின் தின்பண்டங்களை ருசி பார்த்து சந்தோஷ மடைந்திருப்பதால், ஒட்டகத்திடம் அது ரொம்ப இரக்கங் கொண்டது; ஒட்டகத்திற்கு உதவி செய்வதாயும் ஒத்துக் கொண்டது.

அன்று இரவு ஹோட்டலில் தன் படைகளுடன் ஒளிந்து கொள்வதாகவும், திருட்டு மிருகங்கள் வந்தவுடன் கையும் களவு மாகப் பிடித்துக் கொள்வது என்றும் ஏற்பாடு செய்தது சிங்கம். அன்று ஹோட்டல் பக்ஷணங்களில் எல்லாம் சிகப்பு வர்ணம் அதிகம் போடப்பட்டு தயாரிக்கப்பட்டது!

இரவு 12 மணியிருக்கும். 'காலரா கபே'யின் பின்புற வழியாக திருட்டு மிருகங்கள் ஒவ்வொன்ருக ஏறிக் குதித்து உள்ளே சென்றன!

பஞ்சத்தில் அடிபட்டவைகள் போல் பக்ஷணங்களை அவை கள் வாரி வாரி, வாயில் போட்டுத் திணித்துக் கொண்டன! சில மிருகங்கள் அந்த பக்ஷணங்களைத் தின்பதற்காகவே பகலெல் லாம் பட்டினி கிடந்து வயிற்றைக் காலி செய்து கொண்டு வந்திருந்தன !

சந்தடி செய்யாமல் ஒட்டகம் அந்த அறைக் கதவின் வெளித் தாழ்பாளைப் போட்டு விட்டது. பக்ஷணம் தின்னும் மும்மரத்தில் திருட்டு மிருகங்கள் இதைக் கவனிக்கவில்லை. ஐந்து நிமிடத்தில் பக்ஷணங்கள் எல்லாம் காலியாகி விட்டன! தூக்கமாட்டாமல் வயிற்றைத் தடவிக் கொண்டு எல்லாம் வெளி வரத்திரும்பின. கதவு தாழ்பாள் போடப்பட்டிருப்பதைக் கண்டு எல்லாம் திடுக்கிட்டு விட்டன!

வெளியில் சிங்கமும், ஒட்டகமும் பேசிக் கொள்ளும் சத்தம் அவைகளுக்குக் கேட்டது. எல்லாம் நடு நடுங்கி விட்டன. என்ன செய்வதென்று எல்லாம் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. தப்பிக்க வேறு வழியில்லை. சில அழக்கூட ஆரம்பித்து விட்டன.

சிறிது நேரத்திற்கெல்லாம், சிங்கம் தன் படைகளுடன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தது. எல்லாவற்றிற்கும் வயிற்றில் இடி விழுந்தது போல் இருந்தது. எல்லாம் திருட்டு முழி முழித்தன. கையைப் பிசைந்து கொண்டு நின்றன.

"அடே துஷ்டர்களே, இவ்வளவு நேரம் இங்கு என்ன செய்தீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள் — பக்ஷணங்களை யார் தின்றது?" என்று கர்ஜித்தது சிங்கம்.

சிங்கத்திடம் சரியானபடி சிக்கிக்கொண்டும் கூட, தமக்கு ஒன்றும் தெரியாதென்றும் யாரோ ஒரு திருடன் உள்ளே பக்ஷணங்களைத் திருட வந்ததாகவும், அவனை விரட்ட தாங்கள் வந்ததாகவும் அவைகள் தைரியமாக அண்டப்புளுகு அளந்தன.

"அப்படியானால் உங்கள் வாயில் ஏன் சிகப்பு வர்ணம் அடிக்கப்பட்டிருக்கிறது? உண்மையைச் சொல்லுங்கள்—இல்லாவிடில் கொடிய தண்டனை நேரிடும். ஆமாம்" என்று மிகக்கோபத்தோடு சிங்கம் கர்ஜித்தது.

எல்லாத் திருட்டு மிருகங்களும் அப்பொழுதுதான் ஒன்றின் வாயை ஒன்று பார்த்துக்கொண்டன. எல்லாவற்றினுடைய வாயும் செக்கச் சிவக்க இருந்தது. "ஐயோ இந்த வர்ணத்தைப் பாராமல் பக்ஷணத்தைத் தின்று விட்டோமே!" என்று விழித்தன.

"என்ன விழிக்கிறீர்கள் — உண்மையைச் சொல்லுங்கள்" என்று எல்லாவற்றையும் விலங்கைப் போட்டு கட்டிவிட்டது சிங்கம். அவைகள் இனி பொய் சொல்லிக்கூட தப்பிக்க வழியில்லை என்று அறிந்து கொண்டன. ஆகையால் சிங்கத்தின் காலில் விழுந்து இனித் திருடுவதில்லை யென்றும், தங்களை மன்னிக்கும்படியும் வேண்டிக்கொண்டன.

ஒட்டகம் அவைகளை மன்னித்து விடும்படி சிங்கத்தினிடம் சொல்ல, சிங்கம் அவைகளை மன்னித்துவிட்டு, இதற்கு தண்டனையாக 'காலரா கபே'யின் காபி பாத்திரம் அலம்பிவைக்கும் உத்தியோகத்தை வகிக்கும்படி அவைகளுக்குக் கட்டளையிட்டது!

அன்றையதினத்திலிருந்து 'காலரா கபே' மிகுந்த தடபுடலுடன் நடந்து வருகிறது! இப்பொழுது அங்கு ஒரு ரேடியோ கூட வாங்கி வைத்திருப்பதாகக் கேள்வி!

ஓய்வு நேரத்தில்

சிறுவர்களே! சென்ற இதழில் உங்கள் மூளைக்கு ஒருவேலை கொடுத்திருந்தேனல்லவா! அதை சரிவரப் பூர்த்தி செய்தீர்களா? அப்படியானால் நீங்கள் கெட்டிக்காரர்கள் தான். கீழே சரியான விடை கொடுத்திருக்கிறேன். உங்கள் விடை சரிதானா என்பதை ஒத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்!

சரியான விடை.

4	8	3	2	7	5
6	3	9	8	4	1
3	4	1	1	3	3
2	7	5	2	6	7

சிறுவர்களே! இதோ கீழே ஒரு கட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 9 சிறிய கட்டங்கள் இருக்கின்றன. அவைகளில் 1 முதல் 9 வரையுள்ள எண்களை உங்களிஷ்டம் போல் பூர்த்தி செய்யலாம். ஆனால் எந்த வரிசையில் கூட்டிப்பார்த்தாலும் மொத்தத் தொகை 16 வந்தாகவேண்டும். எங்கே முயன்று பாருங்கள்!



இதற்கு விடை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்!

—"கணக்கு வாத்தியார்"

தொடர் கதை

உரிமை கதாசிரியருடையது

உடைந்த படகு

"நாதன்"

ஞாபகம் வந்தது

ஜெனரல் ஆஸ்பத்திரியின் ஓர் அறையில் போடப்பட்டிருந்த கட்டிலில் லலிதா படுக்க வைக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு வெகு சமீபத்தில் சரஸாவும் ஒரு கட்டிலில் ஸ்மரணையற்றுப் படுத்திருந்தாள். கட்டில்களுக்கருகில் ஸ்ரீமான் சுந்தரேஸன், தலைமை டாக்டர், உதவி டாக்டர், இரண்டு நர்ஸ்கள் முதலியோர் பரபரப்பான பாவத்துடன் நின்று கொண்டிருந்தனர்.

"ம்—கடைசி, கடைசியாக நான் என் மருமாளைப் பார்க்கணும்னு ஆசைப் பட்டேன். இந்தப் பாவியின் ஆசை அவளுயிருக்கே உலைவைத்து விட்டதே!" என்று துக்கத்துடன் கூறினார் சுந்தரேஸன்.

"ஏன் ஸார், வீணாக மனஸை 'வொரி' பண்ணிக்கிறேள்! அவர்களுக்கொன்னும் ஆபத்தில்லை. பயம் வேண்டாம்" என்றார் தலைமை டாக்டர்.

"அனேகமாய் இன்னும் பத்து நிமிஷத்துக்குள் அவர்களுக்கு ஞாபகம் வந்துடும் ஸார்! அதோ பாருங்கள் மூச்சுகூட சகஜமாக வந்து கொண்டிருக்கிறது" என்று உதவி டாக்டர் தைரியம் கூறினார். சுந்தரேஸன் மாறி மாறி சரஸாவையும், லலிதாவையும் கவலை ததும்பப் பார்த்தவாறிருந்தார்.

சிறிது நேரத்தில் லலிதா மெதுவாகக் கண்களைத் திறந்தாள். உடனே சுந்தரேஸன் "கண்ணு, லலிதா!" என்று கூப்பிட்டார் ஆவலுடன். லலிதா ஏதோ பேச வாயெடுத்தாள். ஆனால் அலுப்பினால் பேச முடியாமல் மீண்டும் கண்ணை மூடிக்கொண்டாள்.

டாக்டர், ஏதோ ஓர் திராவகத்தை சிறிது அவள் வாயில் ஊற்றினார். இரண்டொரு நிமிடங்கள் கடந்தன. லலிதா கண்ணைத் திறந்து ஒருமுறை சுற்றுப் புறங்களை உற்று கவனித்தாள்.

"நான் எங்கே இருக்கேன்?..." என மெதுவாகக் கேட்டுக் கொண்டாள் லலிதா. "நீயா? ஆஸ்பத்திரியில் இருக்கிறாய்; பயப்படாதேம்மா!" என்றாள் நர்ஸ். சிறிது நேரம் ஏதோ யோசிப்பவள் போல் மௌனமாயிருந்துவிட்டு "ஆமாம் எங்கே என் சரஸா? அவளை அழைச்சுண்டு வாருங்கோ!" என்றாள் படபடப்புடன் லலிதா.

"இதோ பார், பக்கத்துக் கட்டிலில் தான் சரஸா படுத்திருக்கிறாள், கவலைப்படாதே!" என்று சுந்தரேஸன் தெளிந்த மனதடைந்தவராய்ச் சொன்னார்.

லலிதா சுந்தரேஸனைக்கூட சரியாய் கவனிக்காமல் "சரஸா, சரஸா!" என்று கூறிக்கொண்டே எழுந்து

விரைவாய் அடுத்த கட்டிலருகில் சென்று சரஸாவைத் தொட்டாள்.

உடனே நர்ஸுகள் ஓடிச்சென்று லலிதாவைப் பிடித்துக் கொண்டனர்.

ஏறக்குறைய ஐந்து நிமிடத்தில் சரஸாவும் கண்ணைத் திறந்து மெதுவாக 'அக்கா!' என்று கூப்பிட்டாள். "அடி சரஸா! இதோ நான் இருக்கேண்டி !" என்று சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்டே அவள் கைகளைப் பிடித்தாள் லலிதா.

சரஸா மெதுவாக எழுந்து உட்கார்ந்து "கொஞ்சம் ஜலம் வேணும்!" என்று கேட்டாள். நர்ஸ் ஒருத்தி உடனே ஒரு சிறு டம்ளரில் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள். ஜலத்தைக் குடித்த பின் சரஸா சிறிது தெம்புள்ளவள் போல் காணப்பட்டாள்.

"லலிதா! என்னைத் தெரியலையா உனக்கு?" என்று சுந்தரேஸன் அவள் தலையைத் தடவியவாறு கேட்டார். லலிதா சிறிது திகைப்படைந்தவள் போல் காணப்பட்டாலும், சமாளித்துக் கொண்டு "மாமா ! நீங்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம், நான்தான், உன் பாவி அம்மான். அது இருக்கட்டும், ஆத்துக்குப் போய் மற்றவைகளைப் பேசுவோம். வரயா" என்று சுந்தரேஸன் கேட்க, தலை யசைத்தாள் லலிதா. டாக்டரின் சம்மதி பெற்று சுந்தரேஸன் லலிதாவையும், சரஸாவையும் காரில் தன் வீட்டுக் கழைத்துச் சென்றார்.

காதல் நோய்

டாக்டர் ராஜகோபாலன் தன் அறையில் ஓர் சோபாவில் படுத்திருந்தான். அவன் சிந்தை எதற்கும் எட்டாத வெட்ட வெளியில் நின்று எதையோ எண்ணிக் கொண்டிருந்தது. "என்ன அழகு! என்ன வடிவம்!" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

அடுத்த நிமிடம் அவனுடைய மனத்திரையில் ஓர் எழில் சுந்தரி காட்சியளித்தாள். புன்னகை தவழ்ந்த நாணத்துடன் அந்த உருவம் ராஜுவுடன் ஏதோ சொல்ல முயல்வது போல் ராஜுவுக்குத் தோன்றியது.

"லலிதா! போனதுதான் போய் விட்டாயே ! என் அந்தராத்மாவைக் கூடக் கொள்ளை யடித்துக் கொண்டா போகவேணும்? எல்லோருக்கும் நோயைத் தீர்க்கும் எனக்கே நீ காதல் நோயை உண்டாக்கி விட்டாயே! அப் படிப்பட்ட உனக்கு ஏன் நாணம்? ஏன் அங்கேயே நிற்கிறாய்? வாயேன்! நான் உன்னைக் கடித்தா தின்று விடுவேன் !

"நிஜமாகச் சொல்றேன் லலிதா! உன் வாயாடித் தனத்தையெல்லாம் நான் பொறுத்துக் கொள்கிறேன். நீ என்னைத் திட்டினதை யெல்லாம் சகித்துக் கொள்கிறேன். எங்கே இப்பொழுதுகூட வரமாட்டாயா ?...

"லலிதா ! உண்மையாக நான் உன்னை நேசிக்கிறேன். உன் வசீகரமான எழிலும், குழந்தையுள்ளமும், என் நெஞ்சை அள்ளிக் கொண்டே போய்விட்டது. என் காதல், கதைகளில் வர்ணிக்கப்படும் கேலிக் கூத்தான காதல் அல்ல. என் வாழ்க்கையில் நீதான் என் துணைவி. இன்னும் வரமாட்டாயா?......" என்று ராஜு தன்னையும் மறந்து பிதற்றிக் கொண்டிருந்தான்.

அச்சமயம் அங்கு வந்த அவன் தாயார் சீதா "என்னடா, ராஜு பேத்தறே! என்ன வரமாட்டாயா? இதோ வந்துட்டேன், எங்கே, நான் எழுதச் சொன்ன கடுதாசியைக் கொடு......" என்று கேட்டாள்.

ராஜு திடுக்கிட்டான். அவன் கற்பனை பறந்தது. லலிதாவின் உரு வெளித் தோற்றமும் மாயமாயிற்று. வெலவெலத்துப் போய் ஒருவித பயத்துடன் "இல்லை—அவள்—ஆம்—இதோ—லெட்டர்—எழுதி வைத்திருக்கிறேன்......" என்று உளறிக் கொண்டே, பக்கத்திலிருந்த மேஜை மேலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தான் ராஜு.

"ஏண்டா, ராஜு உன் முகம் இப்படி வெளுத்துப் போயிருக்கு? ஜுரம் கிரம் அடிக்கிறதா?" என்று கேட்டவாறு அவன் உடம்பை சீதா தொட்டுப் பார்த்தாள்.

"ஆமாம், ஜுரந்தான்—அது சரி, கடிதத்தைப் படிக்கட்டுமா?" என்றான் ராஜு.

"ஆமா, உன் மாமாவுக்கு நான் சொன்னபடி யெல்லாம் விபரமாக எழுதியிருக்காயோ, இல்லையோ! எங்கே படி கேட்கலாம்........." என்று சீதா கூறினாள்.

"இதோ படிக்கிறேன், கேளு!" என்று சொல்லிவிட்டு கீழ்க்கண்டபடி வாசித்தான் ராஜு.

"அன்புள்ள கண்ணே!

நிஜமாக, உண்மையாக, சத்தியமாக உன்னை நான் காதலிக்கிறேன். உன் உருவத்தை சதா என் இதய மேடையில் வைத்துப் பூஜிக்கிறேன். வேண்டுமானால் என் நெஞ்சைப் பிளந்து பார்! கண்ணே லலிதா என்னை........."

ராஜு படித்து முடிப்பதற்குள் சீதா, "அட மண்டு! என்னத்தை யடா எழுதி யிருக்கே பைத்திய மாட்டமா?......" என்று அடக்க முடியாத சிரிப்புடன் கேட்டாள். ராஜுவுக்கு சிறிது சுய நினைவு வந்து தன் தப்பிதத்தை உணர்ந்தான்.

"அம்மா! அதென்னமோ, எனக்குத் தெரியாது. எனக்கு ஜுரம் அடிக்கிறது......" என்று அவசரமாகக் கூறிவிட்டு எழுந்து சென்று கட்டிலில் படுத்துக் கொண்டான்.

கேள்வியும் பதிலும்

ஸ்ரீமான் சுந்தரேஸன் தன் பங்களாவில் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்கெதிரில் இன்னொரு பிரம்பு நாற்காலியில் லலிதா உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் சரஸா சாய்ந்து படுத்தவாறு, ஒரு ஆப்பிள் பழத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

"ஏனம்மா, லலிதா! இந்த மாதிரி காரியம் செய்யலாமா? தற்கொலை செய்து கொள்வது பாவமல்லவா! நான் ஒருத்தன் மலைபோல் இருக்கையில் உனக்கென்ன குறை? அப்பா போனால்தானென்ன? நான் உங்களை ஆதரிக்கமாட்டேனா? இதற்காகவா, சமுத்திரத்தில் விழுந்தீர்கள்?" என்று கருணையுடன் சுந்தரேஸன் கேட்டார்.

"நீங்கள்தான் ரொம்ப நாளாய் விரோதமாக இருந்தீர்களே மாமா! அப்படியிருக்க, நான் உங்களிடம் எப்படி வரத் துணிவேன்! மேலும் நாங்கள் தற்கொலை செய்துகொள்ள

வில்லே மாமா! சும்மா 'ஜாலி'யாகப் படகில் போகலாமென்று கிளம்பி ேனும். பாழாப்போன புயல்காற்று படகைக் கவிழ்த்து விட்டது......''

''இல்லே மாமா! அக்கா சொல்றது அவ்வளவும் பொய். நான் உங்க கிட்டப் போகலாம்னு முதலிலேயே சொன்னேன் மாமா! இவள்தான் வேண்டாம்னு 'அப்பா கிட்டெ அழைச்சிண்டு போறேன். அப்பா கைலாசத்திலே இருக்கார். கைலாசத்துக்கு கடலிலேதான் போகணும்'னு என்னேப் படகிலே ஏத்திண்டுபோய்க் கடலிலே தள்ளினுள் மாமா......'' என்று சரஸா விஷமச் சிரிப்புடன் சொன்னுள்.

''சீ! போக்கிரி! நான் எப்பொழுது சொன்னேன்? முளேக்கிற முளேயிலேயே பொய்யைப் பாரு!'' என்று சிரித்தாள் லலிதா.

''ம்—இருக்கும், குழந்தை பொய் சொல்லமாட்டாள். எல்லாம் உன் குறும்புதான் லலிதா!'' என்று சிரித்துக் கொண்டே சுந்தரேஸன் கூறினர்.

''அது சரி, கைலாசத்துக்குத் தானே, இப்பொ என்னே அழைச்சுண்டு வந்திருக்கே! அப்படியானு எங்கே, நம்ம அப்பா? சொல்லு அக்கா!'' என்று லலிதாவின் கன்னத்தைக் கிள்ளியவாறு சரஸா கேட்டாள்.

''அடி அசட்டுப் பொண்ணே! கைலாசத்துக்கு நாமெல்லாம் போக முடியாது. செத்துப் போனவாதான் அங்கு போகலாம். செத்துப் போன வாளே நாம் திரும்பவும் பார்க்க முடியாது'' என்ருர் சுந்தரேஸன்.

''அப்படீன்னு, இனிமே அப்பாவையே பாக்க முடியாதா?'' என்று சிறிது ஏக்கத்துடன் கேட்டாள் சரஸா.

''கண்ணே! சரஸா, அப்பாவை வீணே நினேச்சிண்டிருக்காதே! இதோ பார்! உனக்கு குதிரை பொம்மை, யானே பொம்மை, சைகிள், மோட்டார், மிட்டாய் எல்லாம் வாங்கித் தரேன். சந்தோஷமா யிரு!'' என்ருர் சுந்தரேஸன்.

''என் மாமா! இத்தனே பெரிய பங்களா, பெட்டி, பீரோ, நாற்காலி எல்லாம் உங்களுடையது தானே!'' என்ருள் சரஸா.

''ஆமாடி கண்ணு! எல்லாம் மாமாவுக்குச் சொந்தம் தான்......'' என்று கூறினுள் லலிதா.

''ம்—நமக்குத் தான் ஓட்டைக் குடிசை. திரும்பவும் நாம் அங்கே தான் போகணுமோ?'' என்று கவலேயுடன் கேட்டாள் சரஸா.

''சரஸு! இந்த பங்களா உன்னுடையது தான். நீ அந்தப் பழைய குடிசைக்குப் போக வேண்டியதில்லே. என்னிக்கும் நீயும், லலிதாவும் இங்கேயே இருக்கலாம்...'' என்று கூறிக் கொண்டே எழுந்து வந்து சரஸாவை வாரி எடுத்து முத்தமிட்டார் சுந்தரேஸன்.

பின்பு அவர் லலிதாவை நோக்கி ''அம்மா, நீயும், சரஸாவும் போய் கிராமபோன் பிளேட் வச்சுக் கேட்டுண்டிருங்கோ! நான் ஸ்டுடியோவுக்குப் போயிட்டு வரேன்'' என்று கூறி வெளியே சென்ருர்.

எல்லாம் உங்களுக்கே!

சில நாட்களுக்குப் பின் 'சுந்தரேஸன் ஸ்டுடியோ'வில் வெகு மும்மரமாக ஒத்திகைகள் நடந்து கொண்டிருந்தன. டைரக்டெர் சிகரெட் புகை மண்டலத்துக் கிடையே தன் டைரெக்ஷன்' திறமையைக் காட்டிக் கொண்டிருந்தார். நடிகர்களும் 'நிமிஷத்துக்கொரு முறை தேத் தண்ணீர் வெள்ளத்தில் மூழ்கிய வாறு ஒத்திகையை நடத்திக் கொண்டிருந்தனர்.

சிறிது தூரத்தில் இரண்டு மூன்று நாற்காலிகள் போடப் பட்டிருந்தன. அவைகளில் சுந்தரேஸன், லலிதா, சரஸா முதலியோர் உட்கார்ந்து படப் பிடிப்பைப் பார்க்க எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"மாமா! அவாளெல்லாம் அந்த ஜிகினு வேலே செய்த புடவைகளே உடுத்திக் கொண்டு ராணிகள் போல் நடிக்கிறதைப் பார்த்தால் ரொம்ப அழகா யிருக்கு. எனக்குக்கூட அந்த மாதிரி நடிக்கணும்னு ஆசையா யிருக்கு மாமா!" என்றுள் லலிதா சிரித்துக் கொண்டே.

"லலிதா! அவர்களெல்லாம் கதையில் தானே ராணிகளாய் நடிக்கின்றனர்! நீ இந்த ஸ்டுடியோ வுக்கே நிஜ ராணியாகி அதிகாரம் செய்யப் போகிருயே!" என்றுர் சுந்தரேஸன்.

"என்ன மாமா! நானு இந்தப் பெரிய ஸ்டுடியோவுக்கு அதிகாரி யாகப் போறேன்! ம்—அதெல்லாம், வீண் பேச்சு......என்று" லலிதா குறுக்கிட்டாள்.

"இல்லே லலிதா! சத்தியமாகச் சொல்றேன்; இந்தப் பெரிய ஸ்டுடியோவுக்கும், அதோ அங்கிருக்கும் அழகிய பங்களாவுக்கும், இவைகளில் இருக்கும் ஏராளமான பொருள்களுக்கும், என் தோப்பு வயல்களுக்கும் இனிமேல் நீ தான் சொந்தக்காரி" என சுந்தரேஸன் கூறிஞர்.

"என்ன மாமா அவள் மட்டும் ஒசத்தி! அந்த பங்களாவுக்கு நான் ராணியில்லேயோ! போ மாமா அப்படியானு நான் இங்கே எதுக்கு இருக்கணும்? நான் எங்க குடிசைக்கே போயிடறேன்..." என்று சரஸா சிணுங்கினுள்.

சுந்தரேஸன் அவளேத் தன் பக்கத்தில் இழுத்து அன்பாக முத்தமிட்டவாறே "கண்ணு! நீயும் கூடத்தான் இந்தப் பெரிய செல்வங்களுக் கெல்லாம் ராணியாகப் போகிருய்! எல்லாம் உனக்குத் தாண்டி சரஸா! இப்பொ சந்தோஷந்தானே!" என்று கேட்டார்.

"ஓ! இப்பொ எனக்கு குஷி தான் மாமா! ஆனுல் இதையெல்லாம் எங்களுக்குக் கொடுத்துட்டு, அப்பறம் நீ என்ன செய்யப் போறெ மாமா! அதுக்கப்பறம் நீ இங்கிருக்க மாட்டாயா?" என்று சட்டென்று சரஸா கேட்டாள்.

"ஆம், நல்ல கேள்வி கேட்டாய். சரஸா, நான் இன்னிக்கோ, நாளேக்கோ போயிடப் போறவன்; எனக்கெல்லாம் இவை எதற்கு?" என்று கூறிஞர் சுந்தரேஸன்.

லலிதா அவரை நோக்கி "மாமா அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! நீங்களும் போயிட்டா, எங்களுக்கு அப்பறம் யார் துணே, சொல்லுங்கள்?" என்றுள் கவலேயுடன்.

"லலிதா! போவதும், இருப்பதும் நம் கையிலா இருக்கிறது. எனக்கோ

அடிக்கடி மாரடைப்பு இருந்து வருகிறது. அதனுல்தான், இன்றைக்கோ, நாளைக்கோ என்று சொன்னேன்'' என்ருர் அவர்.

“என்ன மாமா! அப்படீன்னு, நீங்க கூட அப்பா மாதிரி கைலாசத்துக்குப் போயிடுவேளா?'' என்று சரஸா கேட்டாள்.

“ஆம், சரஸா!'' என்று சிரித்த வாறே சுந்தரேஸன் பதிலளித்தார். இதற்குள் படப்பிடிப்பு ஆரம்பமாய் விட்டதால் மூவரும் எழுந்து அதைப் பார்க்கச் சென்றனர்.

போக வேண்டியதுதான்

ராஜகோபாலன் லலிதாவின் மேல் காதல் கொண்டது முதல், சதா அவளையே எண்ணிக் கொண்டிருந்தான். எங்கு பார்த்தாலும் அவன் கண்களுக்கு லலிதாவின் தோற்றமே தெரிந்தது. ஒவ்வொருவர் பேச்சிலும், நடையிலும் அவன் லலிதாவின் அம்ஸங்களையே கண்டான்.

அந்தக் காதல் ஜுரத்தின் வேகம் அவனைப் பைத்தியக்காரன் நிலையில் கொண்டு வந்து விட்டது. எந்த வேலையையும், ஒழுங்கீனமாகவே செய்து வந்தான். அவன் ஒவ்வொரு பேச்சிலும் தடுமாற்றமும், மெய்ம்மறதியும் குறுக்கிட்டது.

எனவே ராஜு 'நிமோனியா' ஜுரம் அடிப்பவனுக்கு 'டைபாய்ட்' மருந்தையும், 'மலேரியா' காய்ச்சல் காரனுக்கு 'மஞ்சள் காமாலை' மருந்தையும், 'கண் வலி'க்குப் 'பல் வலி' மருந்தையும், வயிற்றுப் போக்கு நிற்பதற்கு மருந்து கேட்டால் பேதி மருந்தையும் மாற்றி மாற்றிக் கொடுக்கத் தலைப்பட்டான். எந்த மருந்தை எடுக்கப் போனுலும் அதில் லலிதாவின் உருவம் தோன்றி அவனைத் திண்டாடும்படி செய்தது.

ஆகவே ராஜகோபாலனுக்கு வர வர ஊரில் கெட்ட பெயர் உண்டாயிற்று. வரும்படியின் வாயிலும் மண் விழுந்தது. தன்னுடைய 'டிஸ்பென்ஸரி'யைக் கூட மூடு விழா நடத்தும்படி நேரிடுமோ என்ற நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது.

ஒருநாள் சோர்ந்த முகத்துடன் ராஜகோபாலன் எங்கேயோ சென்று விட்டுத் தன் வீட்டுக்குள் நுழைந்தான். அவன் முகத்தைப் பார்த்த சீதா மிகவும் பயந்துபோய் விட்டாள். அவனுடைய மனநோய் அவன் முகத்தை அவ்வளவு கேவலமாகக் காட்டியது. சோபாவில் உணர்ச்சியற்றவன் போல் சென்று உட்கார்ந்த அவனை சீதா கவலையுடன் நோக்கினுள்.

“எண்டாப்பா, ராஜு! உன் உடம்புக்குத்தான் என்ன என்பதைச் சொல்லேன்! வேறு டாக்டரையாவது அழைத்து வந்து மருந்து கொடுக்கச் செய்கிறேன்'' என்ருள் சீதா.

ராஜு மெதுவாகச் சிரித்துக் கொண்டான். “அம்மா! எனக்கு மட்டுமல்ல; இந்த ஊருக்கே வேறு டாக்டரைக் கொண்டு வர வேண்டியதாய் விட்டது.........'' என்று வெறுப்புடன் கூறினுன்.

“அதென்னடா, அப்படிச் சொல்றே! எனக்கு ஒன்னும் புரியலையே!''

“நான் வேறு ஊருக்குப் போய் விட்டால் இந்த ஊருக்கு இன்னொரு டாக்டர்தானே வரணும்!''

"நீயேண்டாப்பா வேறே ஊருக்குப் போகணும்? தலையெழுத்தா?"

"ஆமாம், இந்த ஊரில் இன்னும் இருந்து கொண்டு சாப்பாட்டுக்கு லாட்டரி அடிக்கச் சொல்கிருயா? வரவரத்தான் எனக்கு தம்பிடி வரும் படி கூட வரமாட்டேன் என்கிறதே! ஊரிலிருக்கிற ஜனங்கள் உயிரையாவது விட்டு விடுகிறோம் என்கிருர்களே தவிர, என்னிடம் மருந்து வாங்க இப்பொழுது ஒரு ஈ காக்கை கூட வரமாட்டேன் என்கிறதே! இனி அரை விநாடி கூட இந்த தரித்திரம் பிடித்த ஊரில் இருக்க மாட்டேன்......" என்று ராஜு படபடத்துக் கூறினன்.

"ஆமாம், அண்ணு! எனக்குக்கூட இந்தப் பட்டிக்காடு பிடிக்கலே. ஜம்மென்று பட்டணத்துக்கே போயிடுவோம். அங்கே போனல்தான் சினிமா, டிராமா எல்லாம் சக்கைப் போடு போடலாம்" என அப்பொழுது தான் அங்கு வந்த சுகுண கூறினள்.

"என்னமோ, உங்க இஷ்டம்போல் செய்யுங்கோ! எனக்கென்ன?" என்றவாறே உள்ளே சென்று விட்டாள் சீதா. ராஜு ஒரு பெருமூச்சுடன் சிகரெட் பற்ற வைத்தான்.

(தொடரும்)

ரூ. 500 இனம்.

சித்த வசீகர யந்திரம்:—அதிக சக்தியும், மஹிமையும் வாய்ந்தது. இதை வைத்துக்கொள்வதால் அடைய முடியாதவைகளையெல்லாம் அடைந்து விடலாம். இதற்குச் சக்தியைக் கொடுக்க வேறு எவ்விதக் கஷ்டமும் படவேண்டியதில்லே. இந்த யந்திரத்தின் அற்புத சக்தி, நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்களை உங்கள் கைக்குக் கிட்டச்செய்யும். அவர்கள் பிறகு உங்களை விட்டு பிரியமாட்டார்கள். இது கிரஹக் கோளாறுகளை மாற்றி எதிரிகளைப் பணியச் செய்து, பரீட்சையிலும், வியாபாரத்திலும், லாட்டரியிலும், பந்தயங்களிலும், உத்தியோகத்திலும், ஐச்வர்யம் பெறுவதிலும் வெற்றி அளிக்கவல்லது. சிசுக்களை வியாதிகளினின்று காப்பாற்ற தாய்கள் இதை அணிந்து கொள்ளலாம். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்க ஆரம்பித்தாலும் இதனுடைய சக்தி என்றும் மாருதிருக்கும். குரு மஹாராஜ் தம்முடைய வாழ்க்கையில் அனுபவ முறையில் கண்டுபிடித்த யந்திரம். விலை ரூ. 1/8. போஸ்டேஜ் மாத்திரம் பிரத்தியேகம். 3 யந்திரங்கள் விலை ரூ. 3/12. தபால் சார்ஜ் இனம். ஸ்பெஷல் சக்திவாய்ந்த யந்திரம் விலை ரூ. 4/-. தபால் சார்ஜ் அணு 7.

மிஸ்டர் D. R. D. சான்ஸர் பரோடாவிலிருந்து எழுதுகிருர்:—இந்த யந்திரத்தை வைத்துக்கொண்ட மாத்திரத்தில் எல்லா காரியத்திலும் வெற்றியடைந்து விட்டேன். நான் பழைய கவசத்தை கெட்டுப் போக்கிவிட்டதால் உடனே ஸ்பெஷல் யந்திரம் அனுப்பவும். இதை பொய்யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனமாக அளிக்கப்படும்.

Shri Guru Maharaj Bhardwaj Jyotish Ashram (648)
KALOWANI STREET, :: JULLUNDUR CITY

பிரவேசக் கட்டணம்

"பொது அறிவு"ப் போட்டிக்குக் கூபன் அனுப்பும் நேயர்கள், பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலமோ, இந்தியன் போஸ்டலார்டர் மூலமோ அனுப்பலாம். ஒரு கூபன் மட்டும் அனுப்புவோர் மணியார்டர் செய்ய வேண்டியதில்லை. தபால் ஸ்டாம்பாக அனுப்பிவிடலாம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபால் ஸ்டாம்பு அனுப்பக்கூடாது. பிரிட்டிஷ் போஸ்டலார்டர் அனுப்ப வேண்டும். இலங்கைப் பகுதி நேயர்கள் இலங்கைப் போஸ்டலார்டர் வாங்கி அனுப்பலாம்.

போட்டியாசிரியர்,
"சந்திரோதயம்"
60, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

பொ. அ. போ. 95-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 95
60, தம்பு செட்டி தெரு, சென்னை
MADRAS.

பொ. அ. போ. 96-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 96
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

பொ. அ. போ. 97-க்கு இதைக் கத்தரித்து கவரின்மேல் ஒட்டியனுப்பவும்

To
சந்திரோதயம்
பொது அறிவுப் போட்டி 97
60, தம்பு செட்டி தெரு, சென்னை.
MADRAS.

கீழ்க்கண்ட இடங்களில்

பொது அறிவுப் போட்டிக் கூபன்கள்

வேண்டுவோர் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1. ஹிட்டி நியூஸ் ஏஜன்ஸி, 98, A, வாலாஜா ரோடு, மவுண்டு ரோட் மதறாஸ்.
2. சுகானந்த ஸ்டால், பெரியகடை வீதி கோயம்புத்தூர்.
3. எஸ். மாரியப்பகோன், 42, வடக்கு சித்திரை வீதி, மதுரை.
4. சாரதி நியூஸ் ஏஜன்ஸி, உறையூர்-திருச்சி.
5. கே. வேணுபிள்ளை, வடக்குரத வீதி, திருநெல்வேலி டவுன்.
6. டி எம். கருப்பண்ணன், நியூஸ் ஏஜண்டு, மனோஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
7. டி. எஸ். வேணுகோபால், நியூஸ் ஏஜண்டு, மெயின் ரோடு, சேலம்.
8. என். சாரங்கபாணி, நியூஸ் ஏஜண்டு புதிய மார்க்கட் மாதுங்கா, பம்பாய் 19.
9. ஆனந்தா புக்டிப்போ, 2 & 3 நியூ மார்க்கட் ரோட், பெங்களூர் தண்டு.
10. த. தம்பித்துரை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
11. காமாக்ஷி செட்டியார் அண் சன்ஸ், சுல்தான் பேட்டை, பாலக்காடு.
12. R. K. ஷண்முக முதலியார், மார்க்கட்டு, வேலூர்.
13. ஜி. ராஜகோபால் பிள்ளை, ஜெனரல் மர்ச்செண்ட், கடை வீதி, மாயவரம்
14. R. நாராயணசாமி ஆச்சாரியார், பாத்திர வியாபாரம், திண்டுக்கல்.
15. K. சுப்பிரமணியம், ஈஸ்வரன் கோயில் தெரு, திருப்பூர்.
16. M. O. முருகேசப் பிள்ளை, நாவலப்பிட்டியா, (Ceylon.)
17. மெய்வழிப் புத்தகசாலை, கல்லுக்கட்டி, காரைக்குடி.
18. K. M. முகம்மது தாவுத் சாகிப், மார்க்கெட் தெரு, விஜயபுரம்.
19. சி. கே. கணேசன், நேஷனல் நியூஸ் ஏஜன்ஸி, நாகர்கோயில்.
20. M. கோவிந்தராஜ் முதலியார், கிரோஸின் ஏஜண்டு, காஞ்சீவரம்.
21. P.S.P. முதலியார், 2760, மார்க்கட் தெரு, சிகந்திராபாத் (டெக்கான்.)
22. கதிரேசன் செட்டியார், தவசிப்புலியார் புது வீடு, தேவகோட்டை.
23. T. K. வெங்கடேசகுப்தா, மெயின்ரோடு லால்குடி.
24. A. வேலாயுதம், புக்செல்லர், ஈரோடு.
25. K. V. சங்கபதி நாயுடு, நியூஸ் ஏஜண்டு, புதுத் தெரு, கரூர்.
26. R. நாராயணசாமி, தினமணி ஏஜண்டு, பாண்டிச்சேரி.
27. A. ஜேம்ஸ் ஆம்புரோஸ், T. E. L. C. ஸ்கூல், அபிராமம் (Ramnad.)
28. K. K. மகம்மது மீரா & சன்ஸ், நியூஸ் ஏஜண்டு, டிக்கோயா (Ceylon.)
29. K. M. அப்துல் ரஹிமான் சாஹிப், காட்டுப்புத்தூர்.
30. K. பாவாடை செட்டியார், கடை வீதி, வலங்கைமான்.
31. P. திருவண்ணாமலை, நியூஸ் ஏஜண்டு, உசிலம்பட்டி.
32. J. N. கோபாலகிருஷ்ண பிள்ளை, பெரம்பலூர்—திருச்சி.
33. V. S. சாஸ்திரி வைத்திலிங்கம் ஐயர், ஸ்ரீ வைகுண்டம்.
34. S. அமீர் அலி, மௌண்டன் நியூஸ் ஹால், உதகமண்டலம்.
35. A. பொன்னுசாமி பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, பழனி.
36. S. நாகப்பப் பிள்ளை, கொல்லங்கோடு.
37. P. O. சையத் மொஹிதீன், நியூஸ் ஏஜண்டு, பல்லடம்.
38. லக்ஷ்மி ஸ்டேஷனரி மார்ட், கோபிசெட்டிப்பாளையம்.

தீபாவளிப் பரிசு

சந்திரோதயம்

"பொது அறிவு"ப் போட்டி—95

முடிவு தேதி **11-10-1941** சனிக்கிழமை

பிரவேசக் கட்டணம் ஒரு கூபனுக்கு அணா 4.

ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில் சென்னை, ஸெண்ட்ரல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகள் கண்டுபிடிக்க வேண்டிய விதம்:

வெள்ளைக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும் எண்களைப் பாருங்கள்! ஒவ்வொன்றிலிருந்து இடமிருந்து வலமாகவோ, அல்லது மேலிருந்து கீழாகவோ வார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. ஒரு எண்ணிலிருந்து ஆரம்பிக்கும் வார்த்தை எப்பக்கமாகச் செல்லுகிறதோ அப்பக்கத்திலுள்ள கறுப்புக் கட்டத்தின்முன் அது முடிவடையும். ஒவ்வொரு வெள்ளைக் கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்துத்தான் எழுதலாம்.



உதாரணமாக, நெ 1–க்கு இடமிருந்து வலமாக ஒரு குறிப்பு இருக்கிறது. மேலிருந்து கீழாக ஒரு குறிப்பு இருக்கிறது. ஆகவே நெ. 1 கட்டத்தில் போடப்படும் எழுத்து அந்த இரு குறிப்புகளுக்கும் சரியான வார்த்தைக்கேற்ற முதலெழுத்தாக இருக்க வேண்டும். முதற் குறிப்பு (இடமிருந்து வலமுள்ளது) **இப்பண்டிகையை முன்னிட்டு இந்தப் போட்டிக்கு பெருந்தொகை பரிசாகப் போடப்பட்டிருக்கிறது.** என்றிருக்கிறது. நெ. 1 கட்டத்திலிருந்து இடமிருந்து வலமாக நான்கு வெள்ளைக் கட்டங்களிருக்கின்றன. ஆகவே நெ 1 குறிப்பிற்குச் சரியான வார்த்தை நான்கு எழுத்துக்கள் கொண்டது என்பது தெரிகிறது **தீபாவளி** சரியான விடை. ஒரு வெள்ளைக் கட்டத்திற்கு ஒரு எழுத்து வீதம் எழுதப்பட்டிருக்கிறது

அடுத்தாற்போல் நெ 1 மேலிருந்து கீழ்க்குறிப்பைப் பாருங்கள்! அதற்கு விடை **தீ** என்னும் எழுத்தில் ஆரம்பிப்பதாக இருக்க வேண்டும். **தீபம்** என்ற விடை சரியாக அமைகிறது.

இம்மாதிரியே எல்லா விடைகளையும் கண்டு பிடித்து அந்தந்தக் கட்டங்களிலேயே எழுதி அனுப்ப வேண்டியது. அடித்தல் திருத்தல்கள் அங்கீகரிக்கப்படமாட்டாது.

"பொது அறிவு"ப் போட்டி 95—குறிப்புகள்

இடமிருந்து வலம்

1 இப் பண்டிகையை முன்னிட்டு இந்தப் போட்டிக்குப் பெருந்தொகை பரிசாகப் போட்டிருக்கிறது.

3 இவனுக்கு ஒரு எஜமான் உண்டு.

5 இதன் கொடுமையைச் சகிக்க முடியாது.

6 பிரணவ மந்திரம்.

8 வயதானுல் சிலருக்கு இதன் மீது வெறுப்பு ஏற்படுவது உண்டு.

10 "........... இரண்டொழிய வேறில்லை."

11 யுத்தம் செய்வதற்கு இது முக்யமாய் வேண்டும்.

13 இது அதிக முள்ளவன் வெளியில் வரமாட்டான்.

14 குழந்தைகளுக்கு இத்துடன் பாடம் சொல்லிக் கொடுத்தால், சீக்கிரமே வரும்.

16 இதில்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியாது.

18 ......என்ருல் வாயூருமல் இருக்குமோ?

20 இதையடைய வேண்டிப் பலர் ஏராளமாய்ச் செலவு செய்வர்.

22 சரியான இதைக் கண்டு பிடித்துத் தீபாவளிப் பரிசை ஒருகை பார்க்கலாமே?

23 இது இருக்குமிடத்தில் யாரும் நிற்க விரும்பமாட்டார்கள்.

24 கையால் பிடிக்க முடியாது இதை!

மேலிருந்து கீழ்

1 பெரிய பட்டினங்களில் இதன் அழகை இப்போது காண முடியாது.

2 குறப்பெண்கள் கழுத்தில் அணிவார்கள் இதை.

3 இதில் தண்ணீரை விட்டு வைப்பார்கள்.

4 ஓங்கி அடித்தால் இதில் பிளவு காணும்.

7 இது இல்லாவிட்டால் ஆகாசத்திற்கு அழகு ஏது?

8 நீதிஸ்தலத்திற்கும், ...க்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

9 இப்போது இவர்களுக்கு மோர் சப்ளை செய்யப்படுகிறது.

12 இளமை இங்கே சரியாக இல்லை.

15 இது உள்ள கைத்தடி அதிகம் உபயோகப்பட மாட்டாது.

16 காரம் பூரணமாயில்லை.

17 சுமை தூக்குவோருக்குத் தேவையானது.

19 மூர்க்கத்தனமான இதன் முன்பு தைரியசாலிகூட நிற்பதற்குப் பயப்படுவான்,

20 நுட்பமான காரியம் செய்வதற்கு இது வேண்டும்.

21 மன்மதனுடைய மனைவி.

'பொது அறிவு'ப் போட்டி—95

முடிவு தேதி **11—10—1941** சனிக்கிழமை

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 95-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவதென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப் பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ...........

போட்டி நிபந்தனைகள்

(1) ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணு 4. பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். ஒரு ரூபாய்க்குக் குறைந்து கூபன்கள் அனுப்புவோர் பிரவேசக்கட்டணத்தை தபால் தலைகளாக வும் அனுப்பலாம். சந்தாத் தொகை முதலிய வேறு எதுவும் இந்த மணியார்ட ருடன் சேர்த்து அனுப்பக்கூடாது. அந்தந்தப் போட்டிக்குத் தனித்தனி மணி யார்டராக அனுப்ப வேண்டுமே யல்லாது ஒரே மணியார்டரில் ஒரு போட் டிக்கு மேற்பட்ட போட்டிகளுக்கு பிரவேசக் கட்டணத் தொகைகள் அனுப்பக்கூடாது.

உள்ளூர் வாசிகள் போட்டி முடிவு தேதியன்று மாலை 6-மணிக்குள் நமதாபீசிலுள்ள கவுண்டரில் கூபன்களைக் கவரில் அடக்கம் செய்து, கூபன் எண்ணிக்கையும் விலாசமும் மேல்கவரில் எழுதி பிரவேசக் கட்டணத்துடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒருவர் எத்தனை கூபன்களேனும் ஒரே கவரில் அனுப்பலாம் ஆனால், ஒவ்வொரு கூபனுக்கும் பிரவேசக் கட்டணம் அணு நான்கு செலுத்து வதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதும் சேர்த்து விடையுடன் அனுப்பவேண்டும்.

மணியார்டர் ரசீது இல்லாமல் வரும் கூபன்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாதென்பதை நேயர்கள் நன்கு கவனிக்க வேண்டும். மணியார்டர் கூபனிலும் விடையனுப்பும் கவர்மேலும் போட்டியின் நம்பரையும், அனுப்பப்படும் கூபன்களின் மொத்த நம்பரையும் எழுதவேண்டும். விடை கூபனிலும் மணியார்டர் கூபனிலும் விடை அனுப்பு பவரின் பெயரும், முழு விலாசமும் தெளிவாக எழுதவேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கூபன்கள் அனுப்புகிறவர்கள் கூபன்களில் வரி சைக் கிரமமாக நம்பர் போடவேண்டும்.

(4) விடைக் கூபன்களை மையினல் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். பென்சிலால் எழுதப்பட்ட கூபன்களும், கிழிந்த கூபன்களும், அடித்தல், திருத்தல்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

